ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2007–2008

## கோரிக்கை எண். 42


**திரு.மு.க.ஸ்டாலின்,**
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2007.

<u>பொருளடக்கம்</u>


| வரிசை எண் | பொருள் |
|---|---|
| 1. | முகவுரை |
| 2. | ஊராட்சி அமைப்புகள் |
| 3. | பணியமைப்பு |
| 4. | மத்திய அரசுத் திட்டங்கள் |
| 5. | மாநிலத் திட்டங்கள் |
| 6. | பகுதி–2 திட்டங்கள் |
| 7. | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் |
| 8. | உலக வங்கி உதவி பெறும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் |
| 9. | சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் |
| 10. | வரவு செலவு திட்டம் 2007–08 |
| 11. | முடிவுரை |

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
# கொள்கை விளக்க குறிப்புகள் – 2007– 2008

## 1. முகவுரை:–

*“ ஒருவர் வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால், அங்கே நகரத்துக்கும் கிராமத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு கிராமங்களிலே அழகான வீடுகள், தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள், இரயிலடிகள், பேருந்து நிலையங்கள், சாலைகள் இத்தனையும் நகரத்திற்கு நிகராக கிராமங்களில் இருக்கிறது. அதனால் கிராமத்து மக்கள் நகரத்துக்கு செல்ல வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்படுவதில்லை. அதனால் நகரங்களில் நெருக்கடி ஏற்படுவதில்லை. கிராமங்களே நகரத்தைப் போல உருவாகும் பொழுது, கிராம மக்களுக்கு நகர வாழ்க்கை தேவையில்லாமல் போய்விடுகிறது. “*

- ***கலைஞர் மு.கருணாநிதி,***
***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்.***

இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் ஊரகப்பகுதிகளில் வசிப்பதால் இந்தியாவின் பொருளாதார மாற்றத்துக்கு ஊரக வளர்ச்சி முக்கியமான ஓர் அம்சமாகும். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்பொழுது தமிழக கிராமங்களில் மின்சாரம், குடிநீர் விநியோகம், கிராம இணைப்புச்சாலைகள், போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதார உள்கட்டமைப்பு போன்றவற்றில் வசதிகள் மற்றும் சேவைகள் சிறப்பாக உள்ளன. இருப்பினும் இந்த வசதிகளை மேலும் மேம்படுத்தி கிராமப்புறங்களுக்கும் நகர் புறங்களுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பது இந்த அரசின் முக்கிய கொள்கையாகும். இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்கோளிலிருந்து விளங்குகிறது.

அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை அளிப்பது மட்டுமல்லாது வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்குதல், சுகாதாரம், திறன்மேம்பாடு, மகளிரின் சமூக, பொருளாதார மேம்பாடு போன்றவற்றை நோக்கமாகக் கொண்ட மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையைச் சார்ந்ததாகும். ஊராட்சி அமைப்புகள் திறம்பட செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளாக விளங்கிட வழிவகை செய்வதும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கடமையாகும். இத்துறையின்கீழ் 12,618 கிராம ஊராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும் (வட்டாரங்களுக்கு இணையாக) மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன.

## 2. ஊராட்சி அமைப்புகள்

தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சான்றாகும். அந்த காலகட்டங்களில் சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு

செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளை கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களின் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்த கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிர்வாக தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப்பிரபுத்துவ நிர்வாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேய பேரரசின் நிர்வாக வசதிக்காக தலசுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, சனநாயக அதிகார பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்து சட்டம் 1950" ஆகும். 1957 ஆம் ஆண்டு "உள்ளாட்சி நிர்வாக சீரமைப்பு" குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து "மதராஸ் பஞ்சாயத்து சட்டம் 1958" மற்றும் "மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் 1958" ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன.

அ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சிமுறை.

ஆ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.

இ) கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல். இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக / மறைமுகமாக தேர்ந்தெடுத்தல்.

ஈ) மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தல்

உ) மாவட்ட போர்டுகளை கலைத்தல்.

ஊ) மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை ஆலோசனை வழங்கும் அமைப்பாக்குதல்.

இந்த இரண்டடுக்கு முறை 1975 வரை நல்லமுறையில் செயல்பட்டு, அவைகளுக்கு முறையாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முறையே 1.2.1977 மற்றும் 12.9.1979 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு 1986 முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த தேர்தல்கள் நடைபெறும் வரை, ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிர்வகித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன. மீண்டும் 1996ம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல் நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிர்வகித்தனர்.

1992–ஆம் ஆண்டில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறையில் பல்வேறு அடிப்படை மாறுதல்களை உள்ளடக்கிய அரசமைப்பு (73வது திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக 22.04.1994 முதல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 நடைமுறைக்கு வந்தது. அரசமைப்பு (73வது திருத்த)ச் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆகியவை மாநில அளவில், பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறையில் பின்வரும் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தன.

அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் – கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில்.

ஆ) ஐந்தாண்டுகளுக்கொரு முறை கட்டாய உள்ளாட்சித் தேர்தல்கள்

இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பின் மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, உறுப்பினர் பதவியிடங்கள் (அதாவது வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைமை பதவியிடங்களில் (அதாவது தலைவர்கள்) சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

ஈ) உறுப்பினர் மற்றும் தலைமை பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை தொடர்ந்து நடத்துவதற்கு சுயசார்புடைய அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.

எ) மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற, உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்குமான ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை ஏற்படுத்துதல்.

ஏ) கிராம ஊராட்சியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய ‘‘கிராம சபை’’ கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல்.

## 2.1. உள்ளாட்சித் தேர்தல்கள்

### 2.1.1 ஊராட்சி அமைப்புகளுக்கு 2006ல் நடைபெற்ற தேர்தல்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஏப்ரல் **1994**ல் இயற்றப்பட்டாலும், **1996**ல் புதிய அரசு பதவியேற்றபின்பு தான், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் சாதாரண தேர்தல்கள் அக்டோபர் **1996**ல் நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் **2001**ல் நடத்தப்பட்டன.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூன்றாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் **2006**ல் நடத்தப்பட்டன. கிராம ஊராட்சி வாரியான **2001**ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் மே **2006**ல் தான் பெறப்பட்டதால், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை புதிதாக வரையறை செய்ய போதிய கால அவகாசம் இல்லை. மேலும் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகளுக்கான எல்லை மறுவரையறை செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வது சரி எனவும் முடிவெடுக்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**ல் **28**A எனும் புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஏற்கனவே உள்ள வார்டு அமைப்புகளின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஊரக பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் **76** சதவீதம் மக்கள் வாக்களித்தனர். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களுக்கான நேரடித் தேர்தல்கள் இரண்டு கட்டங்களாக **13.10.2006** மற்றும் **15.10.2006**ல் நடத்தப்பட்டன. கிராம ஊராட்சிகளின் துணைத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான மறைமுகத் தேர்தல்கள் **28.10.2006**ல் நடத்தப்பட்டன. மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையிலும், கிராம ஊராட்சிகளின் பதவியிடங்–

களுக்கான தேர்தல்கள் கட்சி சார்பற்ற முறையிலும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஒரு உறுப்பினர் வார்டுகளையும் கிராம ஊராட்சிகள் ஒரு உறுப்பினர் மற்றும் பல உறுப்பினர் வார்டுகளையும் கொண்டுள்ளன.

மூன்றடுக்கு ஊராட்சிகளில் தேர்தல் நடத்தப்பட்ட பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள் அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 40,879 |
| 2 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 |
| 3 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,570 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 656 |
| 5 | கிராம ஊராட்சி தலைவர்கள் | 12,618 |
| 6 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 |
| 7 | மாவட்ட ஊராட்சி தலைவர்கள் | 29 |

### 2.1.2 பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

இந்திய அரசமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243D-ல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் பெண்களுக்கான பதவியிடங்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு தொடர்புடையவை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல் பிரிவுகள் 11, 20, 32, மற்றும் 57 ஆகியவை ஆகும். இதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995, இணைந்து நிறைவாக்குகிறது. இந்த விதிகளில் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் வார்டுகள், இப்பிரிவினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து அப்பிரிவினரின் மக்கள்தொகை விழுக்காட்டிற்கு ஈடான எண்ணிக்கையில் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த விதிகளின் கீழ், சுழற்சி முறையின் கால அளவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995 விதி 7–ஐ, அரசாணை நிலை எண்.105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 1.9.2006 மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, அக்டோபர், 2006 உள்ளாட்சித் தேர்தலில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பதவியிடங்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில்

பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் அனைத்தும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் சுழற்சி செய்யப்படவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு செய்யப்பட்ட இந்த ஒதுக்கீடு அரசு மறு உத்தரவு பிறப்பிக்கும்வரை தொடரும்.

எனினும், பதவியிடங்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பின் காரணமாக நீண்டகாலமாக தேர்தல்கள் நடைபெறாதிருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளின் தலைவர் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டை சுழற்சி செய்வதில்லை என அரசு தெளிவாக முடிவு செய்தது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்ககான இட ஒதுக்கீடு விபரம் அட்டவணை–2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை – 2</u>**

**<u>பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்</u>**

**2.1.3.**

| வ எ ண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி யிடங்கள் / தலைமை பதவி யிடங்கள் | பெண்களுக்கான இட ஒதுக்கீடு | | ஆதிதிராவிடர் களுக்கான ஒதுக்கீடு | | பழங்குடியினருக் கான இட ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக் கை | சத வீதம் | எண்ணி க்கை | சதவீதம் | எண் ணிக் கை | சதவீத ம் |
| 1 | மாவட்ட ஊராட்சி தலைவர்கள் | 29 | 10 | 34% | 7 | 24% | 0 | 0% |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36% | 87 | 23% | 4 | 1% |
| 3 | கிராம ஊராட்சி தலைவர்கள் | 12618 | 4275 | 34% | 3143 | 25% | 156 | 1% |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 656 | 226 | 34% | 154 | 23% | 8 | 1% |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6570 | 2302 | 35% | 1534 | 23% | 64 | 1% |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97458 | 32638 | 33% | 24630 | 25% | 983 | 1% |

**பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சிகளில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தேர்தல்:**

தமிழகத்தில் **1996–**ஆம் ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டிருந்தாலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகளிலும், கிராம ஊராட்சித் தலைவருக்கான பதவிகள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டதற்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக, தேர்தல்களை வெற்றிகரமாக நடத்த இயலவில்லை.

பாப்பாபட்டி கிராம ஊராட்சியில் அக்டோபர், 1996 முதல் அக்டோபர் 2001 வரை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் பதவிகளுக்கான சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்களில் எந்தவொரு வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2002–ல் நடத்தப்பட்ட தற்செயல் தேர்தலில் தலைவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பதவியேற்றவுடனேயே தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். அக்டோபர், 2002–ல் தலைவருக்கான பதவிக்கு இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பிறகு வேட்பு மனுக்கள் திரும்ப பெறப்பட்டன. ஏப்ரல், 2003–ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அக்டோபர், 2003–ல் தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பதவியேற்றவுடனேயே அவர் அந்தப் பதவியிலிருந்து ராஜினாமா செய்து விட்டார். செப்டம்பர், 2004–ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2005–ல் இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் வேட்பாளர் ஒருவர் இறந்த காரணத்தினால் தேர்தல் நடைபெறவில்லை. 1996 முதல் 2006–ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டு காலத்தில் வார்டு உறுப்பினர் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

கீரிப்பட்டியில், அக்டோபர், 1996 முதல் அக்டோபர் 2001 வரை நடைபெற்ற தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களுக்கான சாதாரண மற்றும் தற்செயல் தேர்தல்களில் எந்தவொரு வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல் 2002–ல் நடைபெற்ற தற்செயல் தேர்தலில், தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பதவியேற்றவுடனேயே, தமது பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார். அக்டோபர், 2002, ஏப்ரல், 2003 மற்றும் அக்டோபர், 2003–ல் நடைபெற்ற தற்செயல் தேர்தல்களில் தலைவருக்கான பதவிக்கு மட்டும் வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. ஆனால் மனுக்கள் பிறகு திரும்பப் பெறப்பட்டன. செப்டம்பர், 2004–ல் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஏப்ரல், 2005–ல், தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பதவியேற்பு நாளன்று அவர் ராஜினாமா செய்துவிட்டார். 1996 முதல் 2006–ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலங்களில் வார்டு உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நாட்டார்மங்கலத்தில் 25.12.1996 அன்று நடைபெற்ற தற்செயல் தேர்தலில், தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்டோபர் 2001 வரை 5 ஆண்டு காலம் பதவியில் தொடர்ந்து இருந்தனர். ஆனால் அக்டோபர், 2001ல் நடைபெற்ற சாதாரண தேர்தலிலும் மற்றும் அதற்கு பிறகு ஏப்ரல், 2005 வரை நடத்தப்பட்ட 6 தற்செயல் தேர்தல்களிலும் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கு வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அக்டோபர், 1996ல் நடைபெற்ற சாதாரண தேர்தலிலும், அதனைத் தொடர்ந்து 2001–ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட தற்செயல் தேர்தல்களிலும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சியில் தலைவர் பதவிக்கும் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு இடங்களுக்கும் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், ஒதுக்கீடு செய்யப்படாத வார்டுகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்டோபர், 2001–ல் நடைபெற்ற சாதாரண தேர்தலின்போதும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 6 தற்செயல் தேர்தல்களிலும் தலைவர் பதவிக்கும் மற்றும் வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் யாரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை. எனவே தேர்தல்கள் நடைபெறவில்லை.

நீண்ட காலமாக, தீர்வு காண முடியாமலிருந்த பிரச்னைகளை இந்த அரசு தீர்வு செய்து, இந்த நான்கு ஊராட்சிகளிலும் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவிகளுக்கான

சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2006ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான தலைவர் பதவிகள் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி செய்யப்பட்டன. ஆனால், இந்த நான்கு ஊராட்சிகளைப் பொறுத்தவரை, சுழற்சி முறையை செயல்படுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முடிவு எடுத்தது. இந்த ஊராட்சிகளைச் சார்ந்த பல்வேறு சமூகத்தினர் தங்களுக்கிடையேயான வேறுபாடுகளை மறந்து, புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை மனதார ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் கிராம ஊராட்சிகளைச் சார்ந்த புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை சிறப்பிக்கும் விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் 13.11.2006 அன்று சமத்துவ பெருவிழா என்ற பெயரில் பாராட்டுவிழா நடைபெற்றது. இந்த கிராம ஊராட்சிகளுக்கு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 லட்சம் சிறப்பு ஊக்குவிப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 2.1.4 புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான பயிற்சி

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான இரண்டு நாள் அறிமுகப் பயிற்சி மாநிலத்திலுள்ள 29 மாவட்டங்களில், 125 இடங்களில் 15.11.2006 முதல் 30.11.2006 வரையிலான இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களில் 80 சதவீதத்திற்கு மேல் முதல் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால், அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புகள், கணக்குகள் பராமரிப்பு, கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டங்கள் செயலாக்கம் குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு தேசிய கிராம வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD) மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் (RIRD) மூலம் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு தரமான பயிற்சி அளிக்கும் நோக்கில், ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் வகுப்பறைகள், சாதனங்கள், கூட்ட அறைகள், விடுதிகள், சமையலறைகள் போன்ற வசதிகளை மேம்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. மூன்று அடுக்கு ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்க தொகுப்பு நிதி ஒன்றினை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

### 2.1. 5 உள்ளாட்சி அமைப்பு தலைவர்களின் மாநாடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பங்கேற்புடன் சென்னையில் 18.3.2007 அன்று மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தலைவர்களுக்கான கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவைகளின் சிறப்பான செயல்பாடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

## 2. 2 அதிகாரப்பகிர்வு

ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிர்வாக அமைப்புகளாக செயல்படவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. 1996–ம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் முதன் முறையாக நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, மாநிலத் திட்டக்குழுவின் அப்போதைய முழு நேர உறுப்பினரான திரு.எல்.சி.ஜெயின் அவர்களைத் தலைவராகக் கொண்டு மூன்று அடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை ஏப்ரல் மாதம், 1997–ல் அரசுக்கு சமர்ப்பித்தது. அக்குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வண்ணம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை மட்டுமல்லாது அரசின் பிற துறைகளான வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம், சமூக நலம், வருவாய், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற துறைகளும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

ஊராட்சிகளுக்கு மேலும் கூடுதலாக அதிகாரங்களை வழங்கிடும் வழிவகைகளைப் பரிந்துரைப்பதற்காக 1997–ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அப்போதைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில், பல்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட, அனுபவம் வாய்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு உயர்நிலைக் குழுவினை மீண்டும் அரசு அமைத்தது. இந்த உயர்நிலைக் குழு 1,209 பரிந்துரைகளுடன் தனது அறிக்கையை 11.01.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. இதில் 718 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2001–06ம் ஆண்டுகளில் இதுபோன்ற உயர்மட்டக் குழு எதுவும் அமைக்கப்படவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டும் என்ற இந்த அரசின் உறுதியினைத் தொடர்ந்து, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரப் பகிர்வு மற்றும் பொறுப்புகள் குறித்து பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அரசாணை நிலை எண். 6 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி–1) துறை நாள் 22.1.2007ன்படி ஒரு உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டது. சென்னையில் 7.3.2007ல் நடைபெற்ற இந்த உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டத்தில் ஆரம்பக் கட்ட ஆலோசனைகள் நடத்தப்பட்டது. இக்குழு தனது பரிந்துரைகளை விரைவில் அரசுக்கு அளிக்கும்.

ஊராட்சிகளுக்கு அதிகாரப் பரவலும், அதிகாரப் பகிர்வும் உயிரோட்டமான ஒரு தொடர் நிகழ்வாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகள், குறிப்பாக, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பது என்ற கருத்து இந்த அரசுக்கு ஏற்புடையதாகும். இது தொடர்பாக, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958–ல் இருந்தவாறு வலிமையான, செயல்திறன் மிக்க கிராம ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் அடங்கிய இரண்டடுக்கு ஊராட்சி அமைப்புகள் தேவையென்பதை தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. மாவட்ட போர்டுகளை கலைத்ததற்கான காரணங்கள் இப்பொழுதும் பொருந்தும் என்பதே இந்த அரசின் கருத்தாகும். மூன்றாவது அடுக்கான மாவட்ட ஊராட்சிக்கும் இந்த நிலை பொருந்தும். கிராம ஊராட்சிகளை அனைத்து மாநிலங்களுக்கும் கட்டாயமாக்குவதுடன், வட்டார அளவில் அல்லது மாவட்ட அளவில் அல்லது இரண்டு அளவிலும் ஏற்புடைய ஊராட்சிகளை மாநில அரசுகள் தங்களின் விருப்பப்படி அமைத்துக் கொள்ள ஏதுவாக

அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு வர இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

## 2.3 உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறுவரையறை செய்தல்

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைப்பு, பிரித்தல் மற்றும் இணைத்தல் குறித்து பல கோரிக்கைகள் அரசால் பெறப்பட்டுள்ளன. இதுபோன்ற கோரிக்கைகள் குறித்து இறுதி பரிந்துரையை அரசுக்கு அனுப்புமுன் மாவட்ட ஆட்சியர்கள்/துறைத் தலைவர்கள் பொதுமக்களின் கருத்துக்களை கேட்பதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து அரசாணை நிலை எண்.131 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி1) துறை நாள் 16.3.2007–ல் உத்திரவிடப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிலுள்ள எவரும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களின் கருத்துக் கேட்பினை மாவட்ட ஆட்சியர்கள் நடத்தி அவர்களது வரைவு பரிந்துரைகளை அளித்தாலும், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகளுக்கான மத்திய அரசின் எல்லை மறுவரையறை ஆணையத்தின் பணி முடிந்தபின்பே அரசு இறுதி உத்திரவு பிறப்பிக்கும் எனவும் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## 2. 4 கிராம சபை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடித்தள சனநாயக அமைப்பாக இருப்பது கிராம சபையாகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிர்வாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல் படுத்துதல் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கவும் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுப்பதற்கும், செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறையாவது, அதாவது சனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. கிராம சபை கூட்டம் நடத்தும் முறையினை செம்மைப்படுத்தும் நோக்கில், இந்த அரசு, தமிழ்நாடு கிராம சபை (குறைவெண் வரம்பு, கூட்டங்கள் கூட்டுதல், நடத்துதல் மற்றும் வழிமுறை) விதிகள் 1998ல் அரசாணை (நிலை) எண்.130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி4) துறை நாள் 25.9.2006 மூலம் தேவையான திருத்தங்கள் செய்து ஒவ்வொரு ஊராட்சியிலுள்ள வார்டுகளிலும், சுழற்சி முறையில் கிராம சபை நடத்திட உத்திரவிட்டுள்ளது. மேலும், பெரிய ஊராட்சிகளில் வாக்காளர்களில் 10 சதவீதத்தினர் கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற குறைவெண் வரம்பினை செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் குறைவெண் வரம்பினை தளர்த்தி, **அட்டவணை–3**ல் குறிப்பிட்டபடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 3**

**கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு**

| வரிசை எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காவது மகளிர் இடம் பெற வேண்டும். மேலும், கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மக்கட் தொகை எத்தனை சதவீதம் உள்ளதோ அத்தனை சதவீத தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென துணை குறைவெண் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்தின் வருகை மற்றும் நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

## 2 .5 கிராம ஊராட்சிகள்

மாநிலத்தின் 29 மாவட்டங்களில் உள்ள 385 வட்டாரங்களில் 12,618 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சராசரியாக 435 கிராம ஊராட்சிகளும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சராசரியாக 32 கிராம ஊராட்சிகளும் உள்ளன. நீலகிரி (35), கன்னியாகுமரி (99), தேனி (130), கரூர் (158) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை குறைவாகவும், விழுப்புரம் (1,104), திருவண்ணாமலை (860), வேலூர் (753), கடலூர் (681), காஞ்சிபுரம் (648) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளன. தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் மக்கட்தொகை மிகப் பெரிய அளவில் மாறுபடுகிறது. சில ஊராட்சிகளில் மக்கட் தொகை 500–க்கும் குறைவாகவும், சில ஊராட்சிகளில் 25,000–க்கு மிகுந்தும் உள்ளன. இதனை **அட்டவணை 4–ல்** காணலாம்.

**அட்டவணை–4**

**மக்கட்தொகை அடிப்படையில்**
**கிராம ஊராட்சிகளின் வகை பாடு**
**(2001 மக்கட் தொகை கணக்கெடுப்பு)**

| மக்கட்தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 500 க்கு கீழ் | 66 |
| 501 முதல் 3,000 வரை | 8,418 |
| 3,001 முதல் 10,000 வரை | 3,948 |

| | |
|---|---|
| 10,001 முதல் 25,000 வரை | 174 |
| 25,000 க்கு மேல் | 12 |
| **மொத்தம்** | **12,618** |

இதே போன்று பல்வேறு கிராம ஊராட்சிகளில் வருமான அளவுகளும் பெருமளவில் மாறுபடுகின்றன. இதன் விவரம் **அட்டவணை 5–**ல் காணலாம்.

**அட்டவணை–5**

**வரவினத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளின் வகைபாடு**
**(2003–04 முதல் 2005–06 வரை**
**மூன்று ஆண்டுகளின் வரவினத்தின் சராசரி)**

| வ. எண். | வருவாய் அளவு | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ரூ.50,000 வரை | 10 |
| 2 | ரூ.50,000 முதல் ரூ.1 லட்சம் வரை | 178 |
| 3 | ரூ.1 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை | 7,422 |
| 4 | ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை | 3,181 |
| 5 | ரூ.10 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை | 1,489 |
| 6 | ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை | 252 |
| 7 | ரூ.50 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை | 60 |
| 8 | ரூ.1 கோடி முதல் ரூ.3 கோடி வரை | 24 |
| 9 | ரூ.3 கோடிக்கு மேல் | 2 |
| | **மொத்தம்** | **12,618** |

தற்போது மாநில நிதி ஆணைய மானியத்தில் 3.48 சதவீதம் (58 சதவீதத்தில் 6 சதவீதம்) நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கு சமன்பாடு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. சமன்பாடு நிதியைவிட மேலும் ஒரு சிறந்த நிதிப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அதன் அளவு மற்றும் மக்கள்தொகையை கணக்கில் கொள்ளாமல், குறைந்த பட்சம் ரூ.3 லட்சம் மாநில நிதிக் குழு மானியமாக ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை அந்த கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால், நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கும் தங்களது கடமைகளை திருப்திகரமாக நிறைவேற்ற போதிய வருவாய் கிடைக்கப் பெறும். மேலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை கிடைக்கும்.

**2. 5. 1 கடமைகள்**

கிராம ஊராட்சிகளின் சில முக்கிய கடமைகள் –

அ. ஊராட்சியிலுள்ள அனைத்து கிராமச் சாலை– களையும் அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.

ஆ. வீட்டு மனைப் பிரிவுகளுக்கு மற்றும் கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்

இ. கட்டிடம் உள்ள பகுதியில் உள்ள பொது இடங்கள் மற்றும் பொதுச் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

ஈ. வடிகால்கள் கட்டுதல்.

ஊ. பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

எ. கிணறுகள், குளங்கள் மற்றும் குட்டைகள் வெட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் மேலும் குடிநீர் வழங்கும் நீர் நிலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

ஏ. சுடுகாடு மற்றும் இடுகாடுகளைப் பராமரித்தல்.

ஐ. பூங்கா மற்றும் படிப்பகங்களைப் பராமரித்தல்.

ஒ. மத்திய அரசின் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள், மத்திய நிதிக் குழு மான்யங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்.

ஓ. அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாக வரையறை செய்யப்படும் பிற கடமைகள்.

**2. 5. 2 நிதி ஆதாரங்கள்**

கிராம ஊராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்கள்

**அ) வரி வருவாய்**

மூன்றடுக்கு ஊராட்சிகளில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டும் தான் வரி விதிக்கும் அதிகாரம் உள்ளது. வீட்டு வரி, தொழில் வரி, விளம்பர வரி ஆகியவை பொதுவாக விதிக்கப்படும் வரிகள்.

**ஆ) வரி அல்லாத வருவாய்**

கட்டிடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம், அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம், குடிநீர் கட்டணம், வண்டி நிலையங்களுக்கான கட்டணம், மீன் பாசி குத்தகை, 2சி மரப்பட்டா, பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளிலிருந்து பெறப்படும் வருமானம், படகுகளிலிருந்து வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை போன்றவைகள் ஆகும்.

**இ) ஒதுக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வரி வருவாய்**

தல வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல் வரி, கேளிக்கை வரி (70% பங்கு), சிறு கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100%), மற்றும் குத்தகை தொகை (50% பங்கு), சமூகக் காடுகள் ஏலத் தொகை மூலம் கிடைக்கும் வருவாய்கள்.

**ஈ) மானியம்**

மத்திய நிதி ஆணைய மானியம், மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி.

### 2. 5. 3 நிர்வாக அதிகாரங்கள்

கிராம ஊராட்சிக்கு கிராம ஊராட்சித் தலைவரே செயல் அலுவலர் ஆவார். தலைவர் மற்றும் துணைத்தலைவர் இருவரும் இணைந்து காசோலை வழங்குவதற்கு கையொப்பமிட வேண்டும். இவர்களுக்கு இடையே சுமூகமான உறவுகள் இல்லையென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் கிராம ஊராட்சியிலுள்ள வேறொரு உறுப்பினரை காசோலையில் தலைவருடன் இணைந்து கையொப்ப–மிடுவதற்கு நியமிப்பார்.

கிராம ஊராட்சிகள் அவைகளின் பொது நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் வரை மேற்கொள்ளும் பணிகளுக்கு வெளி நிர்வாக அனுமதி பெறத் தேவையில்லை. இருப்பினும், மத்திய மாநில அரசின் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவையாகும். கிராம ஊராட்சிகள், ரூ.2,000/– வரை மதிப்பீடு இல்லாமல் ஒரு தடவையில் அவசர பணிகளுக்கு செலவிடவும், மற்றும் ஆண்டொன்றிற்கு ரூ.5,000/– வரை தொழில்நுட்ப ஒப்புதல் இல்லாமல் பணிகள் மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சில்லரைச் செலவினம் மேற்கொள்ள ரூ.500/– வரை காசோலை மூலம் தனது பெயரில் ஊராட்சி நிதியிலிருந்து ஊராட்சித் தலைவர் பெற்று செலவிடலாம்.

கைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளத் தேவையான அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு கைப்பம்பு பராமரிப்புக்கு ஆண்டுக்கு ரூ.600/– மற்றும் பொறியாளரை மதிப்பீடு தயாரிக்கவோ அல்லது பட்டியலுக்காகவோ அணுகாமல் ஒரு விசைபம்புக்கான செலவினம் ஆண்டுக்கு ரூ.7,500க்கு மிகாமல் மேற்கொள்ளலாம். தெருவிளக்கு உபகரணங்களை குறிப்பிட்ட தரத்துடன் ஊராட்சிகளே வாங்கிக்கொள்ளலாம்.

### 2.5.4. உத்தமர் காந்தி ஊராட்சி விருது

அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி2) துறை நாள் 5.9.2006ன்படி உத்தமர் காந்தி ஊராட்சி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2006–07ம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு வருடமும், ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் சிறந்த பூர்வாங்கப் பணிகள், புதுமையான முயற்சிகள் போன்ற இனங்களில் கடந்த 5 ஆண்டுகளில் மிக சிறப்பாக பணியாற்றியுள்ள ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிக்கும் நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரூ.5 லட்சத்துக்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழும் பதக்கமும் வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களின் மறைவுக்குப் பின்னரும் இந்த பரிசுகள் வழங்கப்படும். 2006–07ம் ஆண்டிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட 124 கருத்துருக்களில், 45 கருத்துருக்கள் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையிலான குழுவின் தல ஆய்வுக்கு

தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும்.

2007–08–ஆம் ஆண்டிற்கு இந்த விருதுகள் வழங்குவதற்காக ரூ.75 லட்சம் அனுமதிக்கப்படும்.

## 2. 6 ஊராட்சி ஒன்றியக் குழு

மாநிலத்தில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்) உள்ளன. சராசரியாக ஒரு மாவட்டத்திற்கு 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவு எண்ணிக்கையில் அதாவது (4) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் அதிக அளவில் (22) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

### 2. 6. 1 பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

ஊராட்சி ஒன்றியக் குழுவின் சில முக்கிய பொறுப்புகள் –

(அ) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்ட அனைத்து பொதுச் சாலைகளையும் அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.

(ஆ) குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மற்றும் துணி துவைப்பதற்கும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல்.

(இ) ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்

(ஈ) ஊராட்சி ஒன்றியத்தால் வகைப்படுத்தப்பட்ட பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்துதல்

(உ) ஊராட்சி ஒன்றியச் சந்தை என வகைப்படுத்தப்பட்ட பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

(ஊ) மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்துதல்.

(எ) தொற்று நோய் அல்லது மலேரியா குறித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்

### 2. 6. 2 நிதி ஆதாரங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் வரிகள் ஏதும் விதிக்க இயலாது. ஊராட்சி ஒன்றியங்களின் வருவாய்கள் –

**(அ) வரி அல்லாத வருவாய்கள்**

உரிமக்கட்டணம், சந்தைக் கட்டணம், வாடகை மற்றும் சொத்துக்கள் மீது வருவாய், அபராதங்கள் மற்றும் தண்டத் தொகை.

**(ஆ) ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்கள்**

தலவரி மேல்வரி, கேளிக்கை வரி (30% பங்கு), சிறு கனிமங்கள் மீதான குத்தகைத் தொகை (50% பங்கு).

**(இ) மானியங்கள்**

மத்திய நிதிக்குழு மான்யம், மாநில நிதிக்குழு மான்யம், மத்திய, மாநில அரசு திட்டங்களுக்கான மான்யங்கள், மகப்பேறு நிலையங்களுக்கு மான்யம், ஊரக மருந்தகங்களுக்கான மான்யம்.

ஊராட்சி ஒன்றியங்கள் அவைகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு வெளி நிர்வாக அனுமதி இல்லாமல் ரூ.5 லட்சம் வரை அனுமதி அளிப்பதற்கும், பணிகளைச் செயல்படுத்துவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் மத்திய, மாநில அரசு திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் நிர்வாக அனுமதி தேவை.

## 2. .7 மாவட்ட ஊராட்சிகள்

மாநிலத்தில் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

### 2. 7. 1 பொறுப்புகள்

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகள் பெரும்பாலும் ஆலோசனை வழங்குவதாக பின்வருமாறு உள்ளது–

(அ) மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டத்தை தயாரித்தல்

(ஆ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிர்வாக அறிக்கையை ஒருங்கிணைத்து மாவட்டத்தின் ஆண்டு அறிக்கையை தயாரித்தல்.

(இ) விவசாயம், நில மேம்பாடு, கால்நடை, பால் உற்பத்தி, கோழிப்பண்ணை, மீன் வளம், மற்றும் ஊரகத் தொழில்கள் போன்றவற்றை திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

(ஈ) ஊரகக் குடியிருப்புத் திட்டங்களை குறிப்பாக ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான குடியிருப்புகளுக்கான திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

( உ) பெரிய அளவிலான குடிநீர் திட்டங்களை கண்டறிதல்

### 2. 7. 2 நிதி ஆதாரங்கள்

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் இல்லை. சட்டப்படியான மாநில நிதிக்குழு மான்யம் மற்றும் மத்திய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் வளர்ச்சி மான்யம் மட்டுமே இதன் நிதி ஆதாரமாகும்.

மாவட்ட ஊராட்சிகள் அவைகளின் பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு வெளி நிர்வாக அனுமதி இல்லாமல் ரூ.10 இலட்சம் வரை அனுமதி அளிக்கவும், பணிகளைச் செயல்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் மத்திய அரசுத் திட்டங்களை செயல்படுத்த மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவை.

## 2. 8 மாநில நிதி ஆணைய மானியம்

உள்ளாட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதிப் பங்கீடு செய்யப்படுகிறது. தற்போது மாநிலத்தின் சொந்த நிகர வரி வருவாய்களில் கேளிக்கை வரி நீங்கலாக 8 சதவீதம் நிதி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு முறையே 58:42 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்படுகிறது. ஊரக உள்ளாட்சிகளுக்கான ஒதுக்கீட்டின் 87 சதவீதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே முறையே 47:45:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த மான்யம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒவ்வொரு மாதமும் விடுவிக்கப்படுகிறது. எஞ்சிய 13 சதவீதம், சமன்பாடு நிதி (6%), ஊக்க நிதி (5%) மற்றும் சேம நிதி (2%) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதிப்பங்கீடு 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக நடப்பு நிதியாண்டிலிருந்து உயர்த்தப்படும். மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைக் காலத்திற்குள் இந்த நிதிப்பங்கீடு 10 சதவீத அளவிற்கு படிப்படியாக மேலும் உயர்த்தப்படும். இந்த நிதிப் பங்கீட்டில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்மான விகிதாச்சாரம் 58:42 எனத் தொடரும். கிராம சாலைகள் மற்றும் தெருக்கள் மேம்பாடு, குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை போன்றவைகளை அமைத்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவைகளில் கிராம ஊராட்சிகளுக்கே அதிக பொறுப்பு உள்ளதாலும், கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை 12,618 என அதிக அளவில் உள்ளதாலும், 2007–08 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகிய ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு விகிதம் 60:32:8 என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கை மாற்றங்கள் அடித்தள அளவில் சேவைகளை மேம்பட்ட வகையில் அளித்திட உதவும்.

2006–07 ஆம் ஆண்டில் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 1,224.76 கோடி அரசு ஒதுக்கீடு செய்தது. 2007–08 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ரூ.1,585.72 கோடியாக இருக்கும். இது சுமார் 30 சதவீத உயர்வு ஆகும்.

## 2.9 மத்திய நிதி ஆணைய மானியம்

மத்திய அரசு, பன்னிரெண்டாவது நிதி ஆணைய பரிந்துரைகளின் அடிப்படையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005–06 முதல் 2009–10 ஆம் ஆண்டுகள் வரை மொத்தம் ரூ.870 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

2007–08 ஆம் ஆண்டில் பன்னிரெண்டாவது நிதிக் குழு மானியம் முழுவதையும் மக்கள் தொகையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கே வழங்குவது என மாநில அரசால் அரசாணை எண்.19, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 26.02.2007ன்படி முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்த மானியத்தை கிராம ஊராட்சிகள் குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

2007–08 ஆம் ஆண்டுக்கு ரூ.174 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.10. ஒப்படைக்கப்பட்ட /பகிர்ந்து கொள்ளப்படும் வருவாய்கள்

தலவரி, தலவரி மேல்வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல்வரி, கேளிக்கை வரி, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் மற்றும் குத்தகைத் தொகை மற்றும் சமூகக் காடுகளின் மூலம் கிடைக்கப் பெறும் விற்பனைத் தொகை ஆகியவைகளே ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்து அளிக்கப்படும் முக்கிய வருவாய் ஆதாரங்களாகும். இந்த இனங்களின்கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.250 கோடி முதல் ரூ.300 கோடி வரை கிடைக்கிறது. நில வருவாய்க்கு சமமாக தல வரி வசூலிக்கப்பட்டு அவை கிராம ஊராட்சிகளுக்கு அளிக்கப் படுகின்றது. தலவரி மேல்வரியானது வசூலிக்கப்படும் நில வரி வருவாயில் 5 முதல் 10 மடங்கு வசூலிக்கப்பட்டு, அவை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகின்றன. முத்திரைத் தாள் கட்டண மேல்வரி ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுக்கப்பட்டு, அந்த வட்டாரத்திலுள்ள கிராம ஊராட்சிகளின் நில வருவாய் வசூல் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. வசூலிக்கப்படும் கேளிக்கை வரியில், வசூல் செலவினமாக 10 சதவீதம் பிடித்தம் செய்தபின் எஞ்சியுள்ள தொகை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு 70:30 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து அளிக்கப்படும். சிறு கனிமங்கள் மீதான உரிமைக் கட்டணம் முழுவதும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கும், குத்தகைத் தொகை 50 சதவீதம் ஊராட்சி ஒன்றியத்துக்கும் 50 சதவீதம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கப்படும். சமூகக் காடுகளின் ஏலத் தொகையிலிருந்து 60 சதவீதம் ஊராட்சிக்கும், 40 சதவீதம் வனத் துறைக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பல்வேறு ஒப்படைக்கப்பட்ட/ பகிர்ந்தளிக்கப்படும் வருவாய் இனங்கள் ஈடு செய்யப் படுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதும், மேலும் இது குறித்த அலுவலக பணிகள், தொகையினை ஒப்பிடும்போது அளவுக்கு அதிகமாக உள்ளதும் கண்டறியப் பட்டுள்ளது. அரசின் வரவினங்களை பகிர்ந்தளிப்பதிலும் சமச்சீரற்ற நிலை உள்ளது. எனவே, ஒப்படைக்கப்பட்ட/ பகிர்ந்தளிக்கப்படும் வருவாய்களை துரிதமாகவும், எளிதாகவும் மற்றும் சமச்சீராகவும் பகிர்ந்தளிக்க ஒரு முறையான மாற்று பகிர்மான வகைபாட்டினை ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது.

## 3. பணியமைப்பு

முந்தைய அரசால் 31.05.2001 அன்று மக்கள் நலப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இந்த அரசு பதவியேற்றவுடன் 13,100 மக்கள் நலப் பணியாளர்கள் பணியிடங்கள் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டு, 31.03.2007 வரை 12,774 மக்கள் நலப் பணியாளர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். மக்கள் நலப் பணியாளர்கள் வரி வசூல், சொத்துக்கள் பராமரிப்பு, திட்ட செயலாக்கம் போன்றவற்றில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு உதவி செய்வர். இம்மாநிலத்தில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்ட பணிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வருகைப் பட்டியல் தயார் செய்யவும் மக்கள் நலப் பணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் செயல்பாடுகளை செம்மைப்படுத்தும் வகையில், இதுவரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இத்திட்டம் அரசாணை நிலை எண்.80 (மா.அ.தி.–3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 20.07.2006ன் படி சமூக நலத் துறை இயக்ககத்துக்கு மாற்றப்பட்டது.

தமிழ்நாடு பூமிதான வாரியம் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் விநியோகம் செய்யும் பணியை மேற்கொள்வதால், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக கட்டுப்பாட்டிலிருந்து நில சீர்த்திருத்தத் துறை ஆணையகத்துக்கு, அரசாணை நிலை எண்.144 (மா.அ.தி.–3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20.07.2006ன் படி மாற்றப்பட்டது.

விரிவாக்க அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாக பதவி உயர்வு பெறத் தேவையான தகுதிகள் குறித்த சிறப்பு விதிகளை அரசாணை நிலை எண்.154 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள்.20.10.2006ன் மூலம் இந்த அரசு தளர்த்தி ஆணை வெளியிட்டு துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற ஒரு வருடத்திற்கு குறையாமல் விரிவாக்க அலுவலர் (ஊராட்சி)யாக பணியாற்றியிருந்தால் போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளில் பணிபுரிகின்ற தொகுப்பூதியம் பெறும் பகுதிநேர எழுத்தர்கள், ஊராட்சி உதவியாளர்கள், 01.09.2006–லிருந்து காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் முழு நேர ஊராட்சி உதவியாளர்கள், முதல் நிலை ஊராட்சி உதவியாளர்கள் என பெயர் மாற்றப்பட்டு அவர்களுக்கு ரூ.1,300–20–1,500–25–2,000 என்ற காலமுறை ஊதியம் கொடுக்கப்பட்டுள்ளது. பகுதிநேர எழுத்தர்கள், இரண்டாம் நிலை ஊராட்சி உதவியாளர்கள் என பெயர் மாற்றப்பட்டு அவர்களுக்கு ரூ.625–10–725–20–925 என்ற காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசு மே 2006ல் பதவியேற்ற போது அனைத்து பிரிவு பணியிடங்களிலும் அதிக எண்ணிக்கையில் காலியிடங்கள் இருந்தன. இது திட்டச் செயலாக்கத்தை வெகுவாக பாதித்தது. இதனை இந்த அரசு ஒரு பிரச்னையாக சந்திக்க நேர்ந்தது. துரிதமான நடவடிக்கையின் மூலம் உதவி இயக்குநர் முதலான அனைத்து காலியிடங்களையும் நிரப்புவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

(i) 30 உதவி இயக்குநர்கள், 187 உதவிப் பொறியாளர்கள், 1,001 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்புதல்

(ii) 559 தட்டச்சர்கள், 71 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் பணியிடங்கள் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் மூலம் நிரப்புதல்

(iii) 407 பணிப்பார்வையாளர்கள், 54 இளநிலை வரைவு அலுவலர்கள், 657 சாலை ஆய்வாளர்கள், 63 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நிரப்புதல்

(iv) 333 இளநிலை உதவியாளர்கள், 1 தட்டச்சர், 14 இரவுக் காவலர்கள், 50 அலுவலக உதவியாளர்கள், 4 ஊர்தி ஓட்டுநர்கள் பணியிடங்களை கருணை அடிப்படையில் நிரப்புதல்

(v) 8 தட்டச்சர்கள், 37 இரவுக் காவலர்கள், 2 ஊர்தி ஓட்டுநர்கள் பணியிடங்களை தினக்கூலி பணியாளர்களை கொண்டு நிரப்புதல்.

(vi) 20 இரவுக் காவலர்கள், 182 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் (TEXCO) மூலம் நிரப்புதல்.

வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் செய்யப்படும் நியமனங்கள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் இருக்க அனைத்து நியமனங்களிலும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்புநிலை மற்றும் இனவாரி ஒதுக்கீட்டின்படியும் 1:1 என்ற விகிதத்தில் பெயர் பட்டியல் பெறப்பட வேண்டுமென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தனது கடித எண். 31101/இ3/2006–4 நாள் 28.12.2006ன் மூலம் ஆணையிட்டுள்ளது.

கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வட்டார அளவில் இரண்டு கணினி உதவியாளர்களும், இரண்டு தொழில் நுட்ப உதவியாளர்களும் மற்றும் 10 கிராம ஊராட்சிகளுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் வீதம் புதிய பணியிடங்களை அரசு அனுமதித்துள்ளது.

2004ல் உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, மாவட்ட அளவில் தனி பொறியியல் பிரிவு இல்லாததால் ஒரு செயற் பொறியாளர், ஒரு உதவி செயற் பொறியாளர், ஒரு முதுநிலை வரைவு அலுவலர், இரண்டு இளநிலை வரைவு அலுவலர்கள் மற்றும் ஒரு ஓட்டுனர் அடங்கிய ஒரு தனி தொழில்நுட்ப பிரிவு அனுமதிக்கப் பட்டுள்ளது.

கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் நிலையிலுள்ள அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும் மாறுபட்ட பணிச் சூழ்நிலைகளை உருவாக்கும் நோக்கத்துடன் தேவைப்படும் இடங்களில் இணை இயக்குநர் நிலையில் உள்ள பதவியினை கூடுதல் இயக்குநர் நிலைக்கு உயர்த்திட, கூடுதல் இயக்குநர் பதவியிடங்களின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கைக்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் அரசாணை (நிலை) எண்.17, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21.02.2007ன்படி, அரசு ஆணையிட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும் முன்னுரிமைகளை செயல்படுத்த தற்போதைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பணியாளர் அமைப்பு ஏதுவாக இல்லாததால் அரசு இதனை மறுசீரமைக்க உள்ளது. இதேபோன்ற மறுசீரமைப்பை மகளிர் திட்டத்திலுள்ள திட்டச்

செயலாக்க அமைப்பிலும் அரசு செயல்படுத்தவுள்ளது. மகளிர் திட்டம் மற்றும் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்துவதில் தொண்டு நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் ஒருங்கிணைப்பாளராக வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) பொறுப்பாக்கப்படுவர்.

## 4. மத்திய அரசுத் திட்டங்கள்

### 4.1 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தனித் திட்டமாக 1997–98 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மேலும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு வீடுகட்ட மான்யம் வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு நிதி ஒதுக்கப்படுகிறது. கிராம சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்படும் பணிகளாகும். இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் நிதி வழங்குகின்றன.

#### 4.1.1 புதிய வீடுகள்

1–4–2005 முதல் சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றுக்கு ரூ. 25,000/– எனவும், கடின வகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றுக்கு ரூ. 27,500/– எனவும் அலகுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது தவிர, மாநில அரசு, தனது பங்களிப்புடன் சேர்த்து, ஒவ்வொரு புதிய வீட்டிற்கும் சிமெண்ட் கான்கிரிட் மேற்கூரை அமைக்க தலா ரூ.9,000/– கூடுதல் நிதியாக வழங்குகிறது. கான்கிரிட் மேற்கூரை அமைப்பதற்கான இத்தொகை 2006–2007 முதல் ஒரு வீட்டுக்கு ரூ.9,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 20 ச.மீ ஆகும். புதிய வீடுகள் அனைத்தும் சுகாதாரக் கழிப்பிடம் மற்றும் புகையில்லா சூளா அடுப்புகளுடன் கட்டப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள் மூலம், செலவு குறைவான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பயனாளிகள் கட்டுமானப் பணியினை மேற்கொள்கின்றனர். இந்த ஆண்டு, ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கழிவறை அமைக்க பயனாளிக்கு முழுசுகாதார இயக்க நிதியிலிருந்து ரூ.1,200 மானியமாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

#### 4.1. 2 கச்சா வீடுகளை மேம்படுத்துதல்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அதிகபட்சமாக 20 விழுக்காடு நிதியை, கச்சா வீடுகளை மேம்படுத்தப் பயன்படுத்தலாம். கச்சா வீடுகளை மேம்படுத்த ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ. 12,500/– ஆகும்.

2007–08–ஆம் ஆண்டு 49,850 புதிய வீடுகள் கட்டவும், 11,077 கச்சா வீடுகளை மேம்பாடு செய்யவும் ரூ.198.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கான்கிரிட் மேற்கூரை அமைப்பதற்கு மாநில அரசு வழங்கும் கூடுதல் பங்குத் தொகையான ரூ. 59.82 கோடியும் இதில் அடங்கும்.

### 4.1. 3 வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் இறுதி செய்தல்

மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை கண்டறிய தமிழ்நாட்டில் 2002–03 ஆம் ஆண்டு சமூக பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. வறுமை நிலையை நிர்ணயம் செய்ய, முந்தைய கணக்கெடுப்புகளின் போது பின்பற்றப்பட்ட வருமான அடிப்படையோ அல்லது செலவின அடிப்படையோ இல்லாமல், 13 சமூக பொருளாதார காரணிகள் கொண்ட ஒரு புதிய அணுகுமுறை பின்பற்றப் பட்டது. ஊரக குடும்பங்களை தரப்படுத்த ‘‘0’’ முதல் ‘‘4’’ மதிப்பெண்கள் கொண்ட காரணிகள் பயன்படுத்தப் பட்டது. ஒரு குடும்பம் பெறும் மொத்த மதிப்பெண்கள் ‘‘0’’ முதல் ‘‘52’’ வரை மாறுபடும். ஒரு குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பம் என கண்டறிய குறியீட்டு மதிப்பெண்ணாக 17 நிர்ணயிக்கப்பட்டது. 2002–03ல் நடத்தப்பட்ட சமூக பொருளாதார அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல்களில் தகுதி வாய்ந்த பல குடும்பங்கள் விடுப்பட்டுள்ளன எனவும், தகுதியில்லாத குடும்பங்கள் இடம் பெற்றுள்ளன எனவும் பொதுமக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து அரசுக்கு பல கோரிக்கைகள் வந்தன. எனவே, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் ஒவ்வொரு கிராம ஊராட்சி அலுவலகத்திலும் 2006 ஆம் ஆண்டில் ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கவும், இப்பட்டியல்களின் நகல்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமெனவும் இந்த அரசு ஆணையிட்டது. சேர்த்தல் மற்றும் நீக்கம் குறித்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் வட்டார அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டது. இப்பட்டியல்கள் பெருவாரியாக திருத்தம் செய்யப்பட்டு, 14.11.2006ல் நடைபெற்ற கிராம சபையில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டன. இப்பட்டியல் மீது மேல்முறையீடு செய்ய விரும்புவோர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வழிவகை செய்யப்பட்டுள்ளது. தகுதியான குடும்பங்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர்களின் பட்டியலில் இடம் பெறுவதை உறுதி செய்ய தொடர் சரிபார்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 4.2. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்:

ஊரகப் பகுதிகளில் ஊதிய வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்து, அதன்மூலம் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அளவினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் நிலைத்திருக்கக்கூடிய சமூக மற்றும் பொருளாதார சொத்துகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் இரண்டாவது நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே **20:30:50** என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க 50 சதவீதம் செலவிடப்பட வேண்டும். மாவட்ட ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள

தனிநபர்/குழுக்களின் பணிகளுக்காக 22.5 விழுக்காடு செலவிடப்பட வேண்டும்; 15 விழுக்காடு சிறுபான்மை இனத்தினருக்காக செலவிடப்பட வேண்டும்.

இத்திட்டப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்–களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பொது விநியோகக் கடைகள் மூலம் அரிசியாகவும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினக்கூலி ரூ. 80/– என நிர்ணயித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதித் தேவையை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் வழங்குகின்றன. உணவு தானியத்திற்கான மொத்தச் செலவினையும் மத்திய அரசும், உணவு தானியத்திற்கான போக்குவரத்து செலவினை மாநில அரசும் ஏற்கின்றன.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுவதாலும், மேலும் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு 2007–08ம் ஆண்டில் விரிவு படுத்தப்படுவதாலும், இத்திட்டம் 19 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்படும்.

2007–08ம்ஆண்டில் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

அ. ஊராட்சி அலுவலகங்களை மேம்படுத்துதல்

ஆ. நூலக கட்டிடங்கள்

இ. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

ஈ. மதிய உணவு மையங்கள்/சமையல் கூடங்கள்/
அங்கன்வாடிகள்

உ. பொது விநியோக கடைகள்

ஊ. மயானச் சாலைகள்

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கு, மாவட்ட மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கான 22.5% ஒதுக்கீட்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டில் வீடுகள் கட்டித் தர முன்னுரிமை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.3 தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005 – தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், 2–2–2006ல் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 2007–08ல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

## இத்திட்டத்தின் நோக்கங்கள்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்தில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்கிறது. இச்சட்டம் வேலைக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டம் ஊரகப் பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் நிரந்தரமான வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலைக்கான அட்டையை கிராம ஊராட்சி வழங்கும். வேலைக்காக விண்ணப்பம் செய்த 15 நாட்களுக்குள் பணி வழங்கப்பட வேண்டும். தவறினால், சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாநில அரசு வேலையில்லா படியை வழங்கும். சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான ஊதியம் போன்றவை இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

## நிதி பங்கீடு

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை மத்திய, மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. மத்திய அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:

அ. திறன்சாரா உடல் உழைப்பு தொழிலாளர்–களுக்கான முழு ஊதியச் செலவு முழுவதும்

ஆ. கட்டுமானப் பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் ஊதியச் செலவில் 75 விழுக்காடு.

இ. வட்டார, திட்ட அலுவலர் மற்றும் அவருக்கான உதவி பணியாளர்கள் மேலும் பணியிட வசதிகள் உள்ளிட்ட நிர்வாகச் செலவு

ஈ. மத்திய வேலை உறுதிக் குழுவின் நிர்வாகச் செலவினங்கள்

**மாநில அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:**

அ. கட்டுமான பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்–களுக்கான ஊதியச் செலவில் 25 விழுக்காடு

ஆ. தொழிலாளர்கள் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை கொடுக்க இயலவில்லையெனில் வழங்கக்கூடிய வேலையில்லா படி முழுவதும்

இ. மாநில வேலை உறுதிக் குழுவின் நிர்வாகச் செலவினங்கள்.

தமிழக ஊரகச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு பின்வரும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அ. புதிய குளங்கள் உருவாக்குதல்

ஆ. பாரம்பரிய நீர் ஆதார அமைப்புகளாக விளங்கும் குளங்கள், குட்டைகள், ஊரணிகள், கோவில் குளங்கள் மற்றும் பாசன குளங்களைப் புனரமைத்தல்

இ. பாசனக் கால்வாய்களைத் தூர் வாருதல்

ஈ. பாசனக் குளங்களை தூர் வாருதல் மற்றும் கரையினைப் பலப்படுத்துதல்

உ. புதிய சாலைகள் அமைத்தல்

ஊ. இதர நீர் வள பாதுகாப்பு, மண் வள பாதுகாப்பு நடவடிக்கைகள்/வெள்ளத் தடுப்பு பணிகள்

மே 2006ல் பதவி ஏற்றவுடன், இந்த அரசு இத்திட்டப்பணிகளின் முன்னேற்றம், சரியான முறையில் உரிய அளவு இல்லை என கண்டறிந்தது. இத்திட்டத்தின் கீழ் 31.3.2006 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.3.00 கோடி மட்டுமே என்பதிலிருந்தும் மேலும் 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில் 924 கிராம ஊராட்சிகளில் மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதிலிருந்தும் இது தெரிய வந்தது.

இத்திட்டத்தின் குறைவான சாதனைக்கு காரணங்களாக இருந்த பிரச்னைகளையும் தடைகளையும் அடையாளம் கண்டு இந்த அரசு அவைகளை களைய தொடர் முயற்சிகளை மேற்கொண்டது.

இத்திட்டத்தினை செம்மைப்படுத்தவும், விரைவாக செயல்படுத்தவும் கீழ்க்கண்ட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. அரசாணை நிலை எண்.77 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி –1) துறை, நாள் 14.7.2006 மூலம் இத்திட்டத்திற்கென தனியான ஊரக விலைப்பட்டியல் ஒப்புதலளிக்கப்பட்டு, ஒரு நாளில் 7 மணி நேரம் வேலை செய்த பின்னரும் சட்ட பூர்வமாக குறைந்த பட்ச தினக் கூலியாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.80/–ஐ பெற இருந்த பணி அளவு தொடர்பான முக்கிய தடையை நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் அதிக அளவில் சரளைக்கல் பகுதிகள் உள்ளதால் இப்பகுதிகளுக்கென தனி விலைப்பட்டியல் அரசாணை நிலை எண்.35 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.3.2007 மூலம் வெளியிடப்பட்டது.

2. இத்திட்டம் செயல்படுத்தப்படும் 6 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் செயலாக்கும் அலுவலர்களுக்கு தொடர் பயிற்சிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் பதிவுகள் மேற்கொள்ள வலியுறுத்தப் பட்டது. இந்த 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில் 5 ஊராட்சிகளைத் தவிர மற்ற கிராம ஊராட்சிகளில் பதிவுகள் 30 சதவீதத்தை விட அதிகரித்துள்ளது. மேற்கண்ட 6 மாவட்டங்களில் 31.3.2007ல், பதிவு செய்யப்பட்ட குடும்பங்கள் 50

சதவீதத்தை எட்டியுள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு அதிக அளவில் உள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

4. இத்திட்ட செயல்பாட்டினை ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் முனைப்போடு கண்காணிக்க ஊராட்சி ஒன்றியங்களின் வாகனம் ஒவ்வொன்றுக்கும் மாதம் 50 லிட்டர் கூடுதலாக எரி பொருள் வழங்கி அரசு ஒப்புதலளித்துள்ளது.

5. கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் முறையாக செயல்படுத்துவதற்கு மக்கள் நலப் பணியாளர்களும் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

6. இந்த ஆறு மாவட்டங்களுக்கு 563 தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் 180 கணினி இயக்குநர்கள் அரசாணை நிலை எண்.153, ஊ.வ. மற்றும் ஊ.(மஅதி–1) துறை நாள் 20.10.2006ல் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் பணிகளை முனைப்புடன் கண்காணிக்கவும் தொழிலாளர்களுக்கு விரைவாக ஊதியம் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7. ஒப்பந்தக்காரர்களை பயன்படுத்துவது திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் தடை செய்யப்பட்டுள்ளதால், இத்திட்டப் பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் மறைமுகமாக நுழைவதை தவிர்க்க 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

8. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பணிகள் ரூ.3 லட்சம் மதிப்பீட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப் படுகிறது. அ) ஒரே பணியிடத்தில் தொடர்ந்து 30 நாட்களுக்கு வேலைவாய்ப்பு ஆ) உருவாக்கப்படும் சொத்துக்கள் நிலைத்திருக்கக் கூடியதாகவும் சமுதாயத்திற்கு பயன்தரத் தக்கதாகவும் இருத்தல் இ) அதிக அளவிலான சிறிய பணிகளுக்கு நிதி ஆதாரங்கள் பரவலாக சென்றடைவதை தவிர்த்தல் ஈ) பணிகளை தீவிரமாக கண்காணித்தல் மற்றும் முறைகேடான செலவினங்களை பெருமளவில் குறைத்தல்.

9. இத்திட்டத்தின் கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு தினக்கூலி வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்க தினக் கூலியானது குழுவில் இடம் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்களில் குறைந்த பட்சம் 4 நபர்களின் முன்னிலையில் வழங்கப்படல் வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது:

1. ஊராட்சி மன்றத் தலைவர் – குழுத் தலைவர்
2. ஊராட்சி துணைத் தலைவர்
3. வேலை நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்

4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண்.1,2 மற்றும் 3ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)

5. தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து, இரண்டு ஊக்குநர்கள்.

6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி.

10. இத்திட்டத்தினை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், அரசாணை நிலை எண்.117 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சிஜிஎஸ்.1) துறை, நாள் 14.9.2006ன்படி 25 நபர்கள் கொண்ட தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் முதல் கூட்டம் 25.11.2006ல் நடைபெற்றது.

11. இத்திட்ட செயல்பாடுகளில் வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை உறுதி செய்ய அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கையினை மேற்கொள்ள ஒரு நிரந்தர அமைப்பினை உருவாக்க அரசு வழிவகுக்கும்.

இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாக இந்த 6 மாவட்டங்களில் 31.3.2007 வரை ரூ.152.14 கோடி பயன்படுத்தப்பட்டு 185 லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களில் 82 சதவீதம் பெண்களும் 56 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களும் ஆவர். ஊரக ஊதிய அமைப்பு ஒரு நிரந்தரமான தன்மையை குறிப்பிடும்படியான உயர்வை எட்டியுள்ளது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

## 4.4. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம்.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், 1999ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வறுமை துயர் போக்கிடும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களைக் கொண்டு பல்வேறு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர் பயிற்சி அளிப்பதுடன் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தரப்படுகிறது. மேலும் அடிப்படை கட்டுமான வசதிகளையும், இந்த சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இதர உதவிகளையும் இத்திட்டம் வழங்குகிறது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான செலவினத்தை மத்திய மாநில அரசுகள் 75: 25 என்ற விகிதாச்சாரத்தில் ஏற்கின்றன.

இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில், பயிற்சிக்காக 10 சதவீதமும், உள்கட்டமைப்பு வசதிக்காக 20 சதவீதமும், சுழல்நிதி மற்றும் மானியத்திற்காக 70 சதவீதமும் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் முதல் முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு சுழல்நிதியாக ரூ.25,000/– (வங்கிக் கடன் ரூ.15,000/– மற்றும் மான்யம் ரூ.10,000/–) வழங்கப்படுகிறது. இரண்டாவது முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு தகுதி வாய்ந்த குழுக்களுக்கு அதிகபட்சமாக திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது ரூ.1.25 இலட்சத்தை மிகாத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்கப்படுகிறது.

2007–2008 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்திற்கு **ரூ.131.79** கோடி கடன் இலக்குடன், **ரூ.69.39** கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தை மேலும் பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. கட்டமைப்பு வசதிகள், பயிற்சியாளர்கள் திறன் மற்றும் களப்பணி அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்த பயிற்சி நிறுவனங்கள் தகுதி/தரம் அடிப்படையில் கண்டறியப் பட்டுள்ளன. இந்த பயிற்சி நிறுவனங்களின் தொகுப்பு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு பயிற்சிகள் அளிக்க வசதியாக இருக்கும்.

2. மாநிலம் முழுவதும் ஒரு விரிவான ஆய்வு நடத்தப்பட்டு "தொழில்கள் திட்ட வரைவு" (activity mapping) தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் 2 முக்கிய தொழில் தொகுப்பு (activity cluster) கண்டறியப்பட்டு, இத்தொழில்–களுக்கு பொருளாதார கடனுதவி வழங்கப்படும்.

### 4.5. முழு சுகாதார இயக்கம்

மத்திய அரசு 01.04.1999 முதல் ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரத் திட்டத்தை மாற்றியமைத்து முழு சுகாதார இயக்கமாக துவக்கியது. தீவிர பிரச்சாரத்தின் மூலம் முழு சுகாதாரத்தின் அவசியத்தை உணர்த்தி, தேவையை ஏற்படுத்தி, மாற்று வழிமுறைகள் மூலமாக அத்தேவையை நிறைவு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். 01.04.2006 முதல் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பின் விவரம் பின்வருமாறு.

அ. தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், நிர்வாகச் செலவினங்கள் மற்றும் ஊரக சுகாதார விற்பனை அங்காடிகள் – 80: 20.

ஆ. தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள், 20 சதவீதம் பயனாளிகள்/ ஊராட்சிகளின் பங்களிப்புடன்– 60:20:20

இ. பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள் கழிப்பறைகள்–70:30.

சுகாதார பழக்க வழக்கங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த, பல்ஊடக மக்கள் தொடர்பு சாதனங்கள் (Multi media campaign) மூலம் இந்த ஆண்டு மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு இயக்கம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 4.5.1. நிர்மல் கிராம புரஸ்கார்

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையிலும் துரிதப்படுத்தும் வகையிலும் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச் சுழல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் “நிர்மல் கிராம புரஸ்கார்” என்ற விருதினை 2003 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மத்திய அரசு தொடங்கியது. இத்திட்டத்திற்கான ஊக்கத் தொகை **அட்டவணை எண்–6**ல் உள்ளவாறு வழங்கப்படுகிறது.

**<u>அட்டவணை – 6</u>**

**<u>நிர்மல் கிராம புரஸ்கார் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஊக்கத் தொகை விவரம்</u>**

(தொகை ரூபாய் இலட்சத்தில்)

| விபரம் | மக்கள் தொகை | ஊக்கத் தொகை |
|---|---|---|
| கிராம ஊராட்சி | 1,000க்கு கீழ் | 0.50 |
| | 1,000 – 1,999 | 1.00 |
| | 2,000 – 4,999 | 2.00 |
| | 5,000 – 9,999 | 4.00 |
| | 10,000 (ம) 10,000–க்கு மேல் | 5.00 |
| வட்டாரம் | 50,000 வரை | 10.00 |
| | 50,000 (ம) 50,000–க்கு மேல் | 20.00 |
| மாவட்டம் | 10 இலட்சம் வரை | 30.00 |
| | 10 இலட்சத்திற்கு மேல் | 50.00 |

இத்திட்டத்தின் கீழ் 2006–2007ம் ஆண்டில் 480 கிராம ஊராட்சிகளும், 8 வட்டார ஊராட்சிகளும் நிர்மல் கிராம புரஸ்கார் விருதிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சிகளுக்கு 2007–08ல் விருதுகள் வழங்கப்படும்.

## 4.6 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள் மூலம் உருவாக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்படும் இடைவெளிகளை நிறைவு செய்து, அதன் மூலம் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) தலா ரூ.2.00 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதிக்குட்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களை பொறுத்தவரை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளை பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களைப் பொறுத்த வரை இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளை செயல்படுத்த பரிந்துரைக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்துப் பணிகளுக்கும் நிர்வாக அனுமதி வழங்குவார். தனிப்பட்ட வேலையின் அதிகபட்ச மதிப்பீடு ரூ.25

இலட்சமாகும். இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தடை செய்யப்பட்ட பணிகளுடைய பட்டியலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலும் தெரிவிக்கப் பட்டுள்ளன.

2007–2008ம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கென மத்திய அரசால் ரூ.114.00 கோடி ஒதுக்கப்படும்.

## 4.7 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் இந்திய அரசால் 2000–ம் ஆண்டு டிசம்பர் 25 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2003–ம் ஆண்டிற்குள் 1,000–க்கும் மேல் மக்கள் தொகை உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கும் 2007–ம் ஆண்டிற்குள் 500–லிருந்து 1000 வரை மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளுக்கும் அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். இது 100 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் முதல் மூன்று கட்டங்களுக்கான (2001–02 முதல் 2003–04 வரை) பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆனால் இத்திட்டத்தின் நான்காம் கட்டப்பணிகள் அரசு ஆணை (நிலை) எண். 301, நெடுஞ்சாலைத் துறை, நாள் 22.12.2004–ன் படி நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டது.

இத்திட்ட செயலாக்கத்தின் அனைத்து நிலைகளிலும் ஊராட்சி அமைப்புகளை ஈடுபடுத்த வேண்டியிருப்பதால், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசு ஆணை (நிலை) எண். 95, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17.8.2006–ன் படி மீண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றப்பட்டது. ஆனால் தமிழ்நாடு ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மத்திய அரசிலிருந்து நிதியைப் பெறுவதற்கான தொடர்பு நிறுவனமாகத் தொடர்ந்து செயல்பட்டது. இது, முதல் மூன்று மற்றும் ஐந்தாம் கட்டப்பணிகளை செயல்படுத்துவதோடு, இனிவரும் கால கட்டப்பணிகளையும் நடைமுறைப் படுத்துவது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்ற நிலையில் சில நடைமுறை சிக்கல்களுக்கு வழிவகுத்தது. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் நிர்வாக வரம்பிற்குள் செயல்படும் தமிழ்நாடு ஊரக வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினை மாநிலத்தின் தொடர்பு நிறுவனமாக அரசு ஆணை (நிலை) எண். 15 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 14.2.2007–ன்படி நியமனம் செய்தது.

முதல் மூன்று கட்டங்களில் (2001–02 முதல் 2003–04 வரை) ரூ.434 கோடி மதிப்பீட்டில் 3,364.62 கி.மீ சாலைப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதுவரை 3,244.55 கி.மீ. சாலைப்பணிகள் ரூ. 378.70 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 117.91 கோடி மதிப்பீட்டில் 826 கி.மீ.க்கான நான்காம் கட்டப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையினால் நிறைவேற்றப்படுகிறது.

ஐந்தாம் கட்டப் (2005–06) பணிகள் ரூ. 182.05 கோடி மதிப்பீட்டில் 849.13 கி.மீ. சாலைப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007–08–ம் ஆண்டிற்கு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள ஆறாம்கட்டப் பணிகளில் 500 மற்றும் அதற்கு மேல் மக்கள்தொகை கொண்ட இணைப்புச்சாலைகள் இல்லாத அனைத்து குடியிருப்புகளையும் சேர்க்க இத்துறையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.8. தேசிய கரிம வாயுத் திட்டம்

இது 100 சதவீதம் மத்திய அரசு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பொதுப்பிரிவினருக்கு ரூ.2,100/–ம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ.2,800/–ம் மற்றும் மலைப்பகுதியில் ரூ.3,500/–ம் மானியமாக வழங்கப்படுகிறது. 2007–2008ம் ஆண்டில் உத்தேசமாக ரூ.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 5. மாநிலத் திட்டங்கள்.

### 5. 1. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் புதிய திட்டத்தை அரசாணை எண்.115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.2.) நாள் 11.09.2006 மற்றும் அரசாணை எண்.189, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.2.) நாள் 27.12.2006ல் அறிவித்துள்ளது. நிதி ஒதுக்கீட்டை பொறுத்த மட்டில் தற்போது, செயலாக்கத்தில் உள்ள அனைத்து மத்திய, மாநிலத் திட்டங்களிலேயே இதுதான் மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 21.01.2007 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள திருமாதலம்பாக்கம் ஊராட்சியில் துவக்கி வைக்கப்பட்டது.

அநேக கிராம ஊராட்சிகள் மிகவும் குறைந்த வருவாய் உள்ளவையாக இருப்பதாலும், சட்டப்பூர்வ கடமைகள் ஆற்றுவதற்கு அல்லது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சிரமப்படுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தின் கீழ் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை ஒவ்வொரு வருடமும் தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தி, அதனடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். 1997 முதல் 2002 ம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஐந்தாம் ஆண்டில் (2010–11)ல் எடுத்துக் கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 2006–07ம் ஆண்டு ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20 லட்சம் வீதம் 2,540 கிராம ஊராட்சிகளுக்கு அரசு மொத்தம் ரூ.508 கோடி ஒதுக்கீடு செய்தது. 2007–08ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.506.80 கோடியில் 2,534 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசுத் திட்டங்களின் வழிகாட்டும் நெறிமுறைகள் வழக்கமாக எவ்வித தளர்வும் இல்லாத விதிமுறைகளைக் கொண்டுள்ளன. மேலும் மக்கள் விரும்புகின்ற பணிகளை எடுத்துச் செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையற்றதாகவும் உள்ளன. அதுமட்டு–மல்லாமல், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன்படி சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றிட கிராம ஊராட்சிகளுக்கு போதிய நிதி வசதியும் அளிக்கப்படவில்லை. மத்திய அரசின் திட்டங்களில் உள்ள இந்த இரண்டு இடைவெளிகளையும் நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மொத்த நிதியான ரூ.20 இலட்சத்தில் ரூ.5

இலட்சம் வரையறுக்கப்படாத நிதியாகவும் எஞ்சியுள்ள நிதி வரையறுக்கப்பட்ட இனங்களுக்காகவும் செலவு செய்யலாம்.

முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு ஊராட்சியில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. அதுபோல் அல்லாமல், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 12 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்தாண்டு காலத்தில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். வறிய நிலையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தனிக்கவனம் செலுத்தப்படும். மேலும் 2004ம் ஆண்டு முதல் 2006 வரை செயல்படுத்தப்பட்ட நமது கிராமம் திட்டத்தின் கீழ் நிதி ஆதாரங்கள் மிகக் குறைந்த அளவில் மாநிலத்தில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ஊராட்சி ஒன்றுக்கு 2004–2005ல் ரூ.1.10 இலட்சம், 2005–2006ல் ரூ.1.25 இலட்சம்). இதன் விளைவாக, எந்த கிராம ஊராட்சியிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் காணப்படவில்லை. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க வகையில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தி, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், இதர துறைகளின் குறிப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித்துறை, சமூகநலத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடனும் இயன்ற அளவு ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கும் குறைந்தபட்சம் ரூ.1 கோடி நிதியை அனைத்து அரசு திட்டங்களின் மூலம் ஒருமுகப்படுத்துவதை உறுதிசெய்வது அரசின் நோக்கமாகும்.

இத்திட்ட முக்கியமான வழிகாட்டும் நெறிமுறைகளில் சில பின்வருமாறு:

1 வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தொடர்புடைய வட்டாரத்தின் உதவிப் பொறியாளர் / ஒன்றியப் பொறியாளர் மற்றும் தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நிதிகளின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளை தேர்வு செய்யவும்.

2 தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்கு கிராம சபையின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

3 ஒவ்வொரு கிராமத்திற்கும் சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் அமைக்க ரூபாய் 3.00 இலட்சம் வரையறுக்கப்பட்டுள்ளது.

4 கிராமத்திற்கு ஒரு குளம் / ஊரணி ரூ.3.00 இலட்சம் முதல்5.00 இலட்சம் செலவில் வரையறுக்கப்பட்ட நிதிப் பிரிவிலிருந்து பணி மேற்கொள்ளப்பட வேண்டும். படித்துறைகள் அமைத்தல், குளங்களுக்குள் சிறுகுளங்கள் அமைத்தல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகியவை இதன்கீழ் உள்ள பணிகளாகும். கிராமத்தில் குளம் அல்லது ஊரணி ஏதும் இல்லாத நிலையில், கோயில் குளங்கள் மற்றும் சிறுபாசன ஏரிகளில் தூர் வாரும் பணி எடுத்துச் செய்யலாம். குளம் தூர் எடுத்தலில் குறைந்த பட்சம் 1 மீ ஆழமும், குளத்திலுள்ள சிறுகுளம் தூர் எடுத்தலில் மேலும் 1 மீ ஆழமும் தூர் எடுத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

5 வாய்ப்புள்ள இடங்களில் மீன் வளர்ப்புக் குளங்கள் சுயஉதவிக் குழுக்களிடம் மீன்பிடி உரிமையுடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.

6 சுடுகாடு / இடுகாடுகளில் தொடர்பு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதி அமைக்கப்பட வேண்டும்.

7 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களில் ரூ.1.5 லட்சம் ஒதுக்கீட்டில் பள்ளி விளையாட்டு மையம் அல்லது ரூ.1 லட்சம் ஒதுக்கீட்டில் சமுதாய விளையாட்டு மையம் அமைக்கப்பட வேண்டும்.

8 இக்கிராமங்களில் நூலக கட்டிடம் ரூ. 2.00 இலட்சம் வரையிலும் கட்டப்படும் அல்லது ஏற்கனவே உள்ள கட்டிடம் நூலகமாக மாற்றியமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும். இந்நூலகத்திற்கு ரூ.35,000/–க்கு குறையாமல் புத்தகங்கள் வாங்கப்படும்.

9 சாத்தியம் உள்ள இடங்களில் கிராமச் சந்தைகள் அமைக்கப்பட வேண்டும்.

10 மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 சதவீதம் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள அனைத்து நூலகங்களையும் வருங்காலங்களில் நல்ல முறையில் பராமரிக்க பொது நூலக இயக்குநரிடம் ஒப்படைக்க அரசு தீர்மானித்துள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மையங்களை ஊராட்சிகள் பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூ.10,000 வரை செலவு செய்ய ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

**5. 2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். சட்டமன்றத் தொகுதிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தனது தொகுதியில் செய்யப்பட வேண்டிய மேம்பாட்டு பணிகளை தேர்ந்தெடுத்து பரிந்துரைப்பார். பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி வழங்குவார். அரசாணை நிலை.எண்.134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.–2) நாள் 29.09.2006ல் 2006–2007ம் ஆண்டுக்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீட்டை தலா ரூ.1.00 கோடியிலிருந்து ரூ.1.20 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 50 சதவீதம் (ரூ.60 இலட்சம்) நிதி அரசு குறிப்பிட்டுள்ள முன்னுரிமை பணிகளை எடுத்துச் செய்வதற்கும் மீதமுள்ள 50 சதவீதம் (ரூ.60 இலட்சம்) தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம்பெறும் பணிகளை தவிர்த்து சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் விருப்ப பணிகளை நிறைவேற்றவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவர்களது அன்றாட பணிக்காக தலா ஒரு கணினி (Desktop or Laptop) மற்றும் பல்வகை வசதிகளுடன் கூடிய வண்ண லேசர் பிரிண்டர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2006–07ம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட பணிகளில் கீழ்க்கண்ட பணிகள் முன்னுரிமைப் பணிகளாக அறிவிக்கப்பட்டிருந்தது. 1. சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் (ரூ.25 லட்சம்), 2. சோடியம் ஆவி விளக்குகள் (ரூ.15 லட்சம்), 3. தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துதல் (ரூ.20 லட்சம்). மாநகராட்சிப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட நிதியினை அடிப்படை வசதிகளுக்கான பணிகளை எடுத்து செய்யவும் பயன்படுத்தலாம். 2007–08ம் ஆண்டில் இந்த முன்னுரிமைப் பட்டியல் மாற்றியமைக்கப்படவுள்ளது.

ஊரகப் பகுதிகளில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் போல், பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்காக தனி வீடுகள் கட்டுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழுதுநீக்கம் செய்யவும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போன்று, குளங்கள், ஆறுகள், ஊரணிகள் மற்றும் கால்வாய்களை தூர்வாரும் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் எடுத்துச் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

2007–08ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு சுமார் ரூ.282 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.3 நபார்டு – ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி – XII – 2006–07

மாநிலத்தில் உள்ள சாலைகளை நன்கு பராமரிக்கும் வகையில் 1,543.32 கி.மீ. நீளத்திற்கான 889 பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை மேம்படுத்த நபார்டு வங்கி ரூ.107.39 கோடி நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதலாவது தவணைத் தொகை ரூ.50.00 கோடி பெறப்பட்டு மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 5.4 பன்னிரெண்டாவது நிதிக்குழு மானியம் – சாலைப் பணிகள் – 2006–07

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் செல்லும் சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகளை பராமரிக்க பன்னிரெண்டாவது நிதிக் குழு மானியம் நன்கு பயன்படுத்தப்பட்டது. சீரான தினசரி போக்குவரத்திற்கு தடையாக உள்ள பழுதடைந்த மற்றும் குண்டும் குழியுமாக உள்ள தார்ச்சாலைகளை இந்த மான்யத்தில் புதுப்பிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

அரசாணை எண்.222 (எச்.வி.2) நெடுஞ்சாலைத் துறை, நாள்.01.11.2006–ன்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பழுதடைந்த 1,460 தார்ச் சாலைகளை ரூ.103.6 கோடி மதிப்பீட்டில் 1,895.45 கி.மீ. நீளத்திற்கு புதுப்பிக்க 2006–07ம் ஆண்டில் 12–வது நிதிக்குழு மான்ய உதவியுடன் புதுப்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.103.6 கோடி மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. 2007–08ம் ஆண்டில் 12–வது நிதிக்குழு மான்யத்தில், 2007–08ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள தார்ச்சாலைகளை புதுப்பிக்க ரூ.103.6 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.5 தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான முழுமையான மேம்பாட்டுத் திட்டம்

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் நக்சலைட்டுகள் உருவாகும் சூழ்நிலையை தடுக்கும் பொருட்டு **2003–04**லிருந்து சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2007–08**ம் ஆண்டில் ரூ.**7.5** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. பகுதி – 2 திட்டங்கள்

**2007–08**ம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல் படுத்தப்படும்.

### 6.1. பயிற்சி நிறுவனங்களை நவீனமயமாக்குதல்

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களை மேலும் நவீனமயமாக்க இந்நிறுவனங்களுக்கு வகுப்பறைகள், வகுப்பறை உபகரணங்கள், கருத்தரங்க அறைகள், தங்கும் அறைகள், உணவு அறைகள், சமையலறைகள் மற்றும் இதர வசதிகளை உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காக ரூ.**3.5** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.2 உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்கள்

கடலூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர் மற்றும் தர்மபுரி உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்கள் தற்போது மாவட்ட தலைமையிடங்களில் இயங்காமல், வேறு இடங்களில் இயங்குகின்றன. மேற்கண்ட உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட தலைநகரங்களில் கட்ட ரூ.**60** லட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 6.3 ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கு வாகனங்கள்

ஊரக வளர்ச்சி திட்டப் பணிகளை சிறந்த முறையிலும், திறம்படவும் கண்காணிப்பதற்காக தற்போது வாகன வசதி இல்லாத உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்), உதவி இயக்குநர்கள் (தணிக்கை), செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி), உதவி செயற் பொறியாளர்கள் (குடிநீர் வழங்கல்), உதவி செயற் பொறியாளர்கள் (பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு ரூ.**5.62** கோடியில் **123** வாகனங்கள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

### 6.4. அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கும் ஒளிநகல் மற்றும் நிகரி இயந்திரம் வழங்குதல்

நிர்வாகத் திறனை அதிகரிக்க ஏதுவாக **385** வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கும், உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்களுக்கும் ரூ.**2.92** கோடியில் ஒளிநகல் மற்றும் நிகரி இயந்திரங்கள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

## 6.5 தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு அலுவலக கட்டிடம்

மாநில தேர்தல் ஆணைய அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் சென்னையில் கட்டுவதற்கு அரசு முடிவெடுத்து, ரூ.1.50 கோடியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

## 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

கிராமப்புற பெண்கள், சமூக, பொருளாதார வளர்ச்சியுடன் ஆற்றலும் பெற வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டது. தொடங்கப்பட்டதிலிருந்து ஜுலை 2006 வரை, இந்த நிறுவனம் சமூக நலத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. ஜுலை 2006 லிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை எண் 81, நாள் 20.7.2006 –ன்படி இந்நிறுவனம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கான பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகவும், நல்ல ஒருங்கிணைப்புடனும் செயல்படுத்த இந்த மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிறுவனம் செம்மையாக செயல்பட வழிகாட்டும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசாணை எண்.148, நாள் 12.10.2006–ன்படி, தொழில் நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் குழுமம் மறுசீரமைக்கப்பட்டது.

தமிழக அரசு, இந்தியாவிலேயே முன்னோடியாக சுயஉதவிக் குழுக்களை, செப்டம்பர்,1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் அமைக்க தொடங்கியது. பின்பு இத்திட்டம், 1991–92 ஆம் ஆண்டு சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அதே போன்று 1992–93 ஆம் ஆண்டு, இத்திட்டம் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டது.

### 7.1 மகளிர் திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில்தான், தற்சமயம் மிகவும் பிரசித்தி பெற்றுள்ள ''மகளிர் திட்டம்,'' 1997–98 ஆம் ஆண்டில், மாநில அரசு நிதியுதவியுடன் விழுப்புரம், தர்மபுரி (கிருஷ்ணகிரி), நாமக்கல், கடலூர், இராமநாதபுரம், மதுரை, கரூர், திருவாரூர், தூத்துக்குடி, விருதுநகர், தேனி, திருவள்ளூர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

**1998–99** ஆம் ஆண்டில் இத்திட்டம் திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஈரோடு, புதுக்கோட்டை, சிவகங்கை, நீலகிரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

மேலும், **1999–2000** ஆம் ஆண்டில், இத்திட்டம் கன்னியாகுமரி, கோயம்பத்தூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், பெரம்பலூர் (அரியலூர்), தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. **2001–02** ஆம் ஆண்டில், இத்திட்டம் சென்னைக்கும் விரிவுபடுத்தப் பட்டதன் மூலம், மாநிலம் முழுவதும் மகளிர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் அளித்து மேம்படுத்தப் படுகின்றன.

## 7.2 சுய உதவிக் குழுக்கள்

ஒத்த கருத்துடைய ஏழை மகளிர் தாமாகவே முன் வந்து ஒன்று சேர்ந்து ஒரு சிறு குழு அமைப்பதே சுய உதவிக் குழுவாகும். இக்குழுவில் 12 லிருந்து 20 மகளிர் உறுப்பினராக இருக்கலாம். குழு உறுப்பினர்கள் 18 முதல் 60 வயதுடையவர்களாக இருக்க வேண்டும். குழுவினர் அனைவரும் ஏகமனதாக ஏற்று ஒரு குறிப்பிட்ட தொகையினை வாரம் அல்லது மாதந்தோறும் சேமிக்கின்றனர்.

குழு உறுப்பினர்களிடையே, சிக்கனத்தையும், வங்கியில் சேமிக்கும் பழக்கத்தையும் உருவாக்குவதே சுய உதவிக் குழுக்களின் சிறப்பு அம்சமாகும். கந்து வட்டிக்காரர்களின் கோரப்பிடியிலிருந்து விடுபடவும், தனி நபராக செயல்படும் போது வங்கிகளிலிருந்து கிடைக்க இயலாத நிதி உதவியை பெறுவதற்கும் சுய உதவிக் குழுக்கள் சிறந்த அமைப்புகள் என்று பெயர் பெற்றுள்ளன.

காலம் தவறாமல் கூட்டங்கள் நடத்துதல், அதில் உறுப்பினர்கள் கட்டாயமாக கலந்து கொண்டு தங்கள் சேமிப்பினை வழங்குதல் மற்றும் முறையான பயிற்சிகள் ஆகியவையே, சுய உதவிக் குழு கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். பொதுவாக, ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினரும் ஒரு மாதத்திற்கு ரூ.100/– வரை சேமிக்கிறார்கள். குழுவை வழி நடத்த, உறுப்பினர்கள், அவர்களிடையே ஒரு ஊக்குநர் மற்றும் இரண்டு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். ஊக்குநரின் தலையாய பணி, குழுவை வழி நடத்திச் செல்வதும், குழு பதிவேடுகளை பராமரித்தலும் ஆகும். ஊக்குநருக்கு உதவியாக குழுவின் கணக்குகளை பராமரிப்பது மற்றும் வங்கிக்கு செல்வது ஆகிய பணிகளை இரு பிரதிநிதிகளும் மேற்கொள்கின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தாம் பெறுகின்ற கடனை சரியான முறையில் தவணை தவறாமல் திரும்பச் செலுத்துவதுதான், தமிழகத்தில் இக்குழுக்கள் பெற்றுள்ள மாபெரும் வெற்றிக்கு காரணம். சுய உதவிக் குழு கடன்கள் 98 விழுக்காடு வரை திருப்பிச் செலுத்தப்படுகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஒற்றுமை உணர்வோடு விவேகத்துடன் தாங்கள் பெற்ற கடனை சிறந்த முறையில் பயன்படுத்துகின்றனர்.

### 7.3 திறன் வளர்த்தல்

சுய உதவிக் குழுக்கள் ஒற்றுமையுடன் திறம்பட செயல்படுவதற்கு, அக்குழுக்களின் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும். ஆகையால், குழு ஆரம்பித்து 6 மாத காலத்திற்குள் குழுக்களின் அடிப்படைப் பயிற்சிகளான, குழு உறுப்பினர் பயிற்சி மற்றும் ஊக்குநர் பிரதிநிதி பயிற்சி ஆகியவை முறையாக அளிக்கப்படுகின்றன.

### 7.3.1 குழு உறுப்பினர் பயிற்சி

குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இப்பயிற்சி 4 நாட்களில் 4 பாடத்திட்டங்களாக அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கம், சுய உதவிக் குழுவின் கோட்பாடுகளை அனைத்து உறுப்பினர்களும் அறிந்து கொள்வதோடு அவர்களிடையே மறைந்துள்ள திறன்களை வெளிக் கொணர்வதும் ஆகும். 2006–07 ஆம் ஆண்டில், பயிற்சிக்கு வருகை தரும் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித் தொகை ரூ.7.50 லிருந்து ரூ.45/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.2 ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி

ஒவ்வொரு குழு ஊக்குநருக்கும் மற்றும் குழுவிலுள்ள ஒரு பிரதிநிதிக்கும் இப்பயிற்சி 6 நாட்களில் 3 பாடத்திட்டங்களாக அளிக்கப்படுகிறது. குழுவை வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாக செயல்படும் திறன், பதிவேடுகளை பராமரிக்கும் திறன் ஆகிய திறன்களை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். 2006–07 ஆம் ஆண்டு முதல் பயிற்சிக்கு வருகை தரும் பயிற்சியாளர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித் தொகை ரூ.20/– லிருந்து ரூ.45/– ஆக உயர்த்தி வழங்கப்படுகின்றது.

### 7.3.3. சமுதாய பயிற்றுநர்கள்

2007–08 ஆம் ஆண்டில், சிறந்த குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களைத் தேர்வு செய்து, அவர்களை சமுதாய பயிற்றுநர்களாக உருவாக்கி, அவர்கள் மூலமாகவே குழு உறுப்பினர் பயிற்சி மற்றும் ஊக்குநர், பிரதிநிதி பயிற்சிகளை அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. வரும் இரண்டு ஆண்டுகளுக்குள், ஏறத்தாழ 5000 சமுதாய பயிற்றுநர்கள் உருவாக்கப்பட உள்ளனர்.

### 7.4 தரமதிப்பீடு

சுய உதவிக் குழுக்கள், ஆரம்பித்த 6 மாதங்களுக்குப் பிறகு தரமதிப்பீட்டில் பங்கேற்க தகுதி பெறுகின்றன. தரமதிப்பீடு என்பது சுய உதவிக் குழுக்களின் கடன் பெறும் தகுதியை நிர்ணயம் செய்ய உதவும் அளவுகோல் ஆகும். தரமதிப்பீட்டுக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்கள்:

1. உதவித் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்)
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து ஒரு பிரதிநிதி
3. வங்கியாளர்

4. அரசு சாரா நிறுவன பிரதிநிதி

சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்தும் ஒரு பிரதிநிதி தரமதிப்பீட்டு குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து சேமித்தல், குழு கூட்டங்களின் எண்ணிக்கை, பதிவேடுகளை நல்ல முறையில் பராமரித்தல், உட்கடன் வாங்குதல், கடனை திருப்பிச் செலுத்துதல் ஆகியவை தர மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படும் முக்கிய அம்சங்களாகும்.

தரமதிப்பீட்டில் தேர்வு பெற்ற குழுக்கள், கடன் இணைப்பு பெற தகுதி அடைகிறார்கள். இவர்களுக்கு பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், தாட்கோ ஆகிய திட்டங்களின் கீழ் சுழல் நிதி அல்லது வங்கிகள் மூலம் நேரடிக் கடன் வழங்கப்படுகிறது.

ஆறு மாதங்களுக்குப் பின்னர், பொருளாதாரக் கடன் பெற விரும்பும் குழுக்கள், தொழில் தொடங்குவதற்கு தகுதி உடையவர்களா என்பதை உறுதி செய்யும் பொருட்டு இரண்டாவது தரமதிப்பீடு செய்யப்படுகிறது. இரண்டாவது தரமதிப்பீட்டில் தேர்வு பெற்ற குழுக்களுக்கு, தொழில் தொடங்க பொருளாதார கடன், எஸ்.ஜி.எஸ்.ஒய், தாட்கோ ஆகிய திட்டங்களின் கீழ் மான்யத்துடன் கூடிய வங்கி கடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

## 7.5 அரசு சாரா நிறுவனங்கள்

மகளிர் திட்டமானது அரசு சாரா நிறுவனங்களின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்களை அமைத்தல், அவர்களுக்கு பயிற்சி அளித்து பராமரித்தல் ஆகியவை இந்நிறுவனங்களின் பணி ஆகும். இதற்கென இந்நிறுவனங்களுக்கு மகளிர் திட்டம் மூலம் குழு அமைப்புத் தொகை மற்றும் பராமரிப்பு தொகை வழங்கப்படுகிறது. மகளிர் திட்டத்தில் இணைந்து செயல்பட விரும்பும் அரசு சாரா நிறுவனங்கள் கீழ்க்கண்ட விதிமுறைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் தேர்வு செய்யப்படுகின்றனர்.

- குழு அமைத்தலில் முந்தைய அனுபவம்
- மூன்று வருடங்களுக்கு அப்பழுக்கில்லாத தொடர் செயல்பாடு.
- போதுமான உட்கட்டமைப்பு வசதிகள்.

தற்சமயம் மகளிர் திட்டத்தின் கீழ் 628 அரசு சாரா நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன.

2002 ஆம் வருடத்தில், மகளிர் திட்டம் அரசு சாரா நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஐந்து வருட ஒப்பந்தம் மார்ச் 2007 உடன் முடிவடைந்துள்ளது. நடப்பாண்டில் அமல்படுத்துவதற்கான, புதிய ஒப்பந்த வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த புதிய ஒப்பந்தம் வாழ்வாதார மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும். அரசு சாரா நிறுவனங்களை அங்கீகாரம் செய்வதற்கென, தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள், இப்புதிய அணுகுமுறை அடிப்படையில் மறுஆய்வு செய்யப்படும்.

## 7.6 சுய உதவிக் குழுக்களின் தற்போதைய நிலை

**1989** ஆம் ஆண்டில், மகளிர் மேம்பாட்டிற்கென உருவாக்கப்பட்ட இந்த சுய உதவிக் குழு இயக்கமானது, இன்று தமிழகமெங்கும் உள்ள ஏழை எளிய மகளிரின் வாழ்வில் ஒளி ஏற்றும் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. இந்த ஆண்டில், மார்ச் **2007** வரை, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள **12564** சுய உதவிக் குழுக்கள் உட்பட **22020** புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக **3,37,744** சுய உதவிக் குழுக்கள் மகளிர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

**2006–07** ஆம் ஆண்டில், **5000** நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ.**10,000/–** வீதம், ரூ.**5.00** கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

**31.03.2007** வரையிலான சுய உதவிக் குழுக்களின் விவரங்கள் **அட்டவணை–7–ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை–7**

**சுய உதவிக் குழுக்களின் விவரம்**

| | |
|---|---|
| மொத்த சுய உதவிக் குழுக்கள் | 3,37,744 |
| மொத்த குழு உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 54.32 |
| கிராமப்புற குழுக்கள் எண்ணிக்கை | 2,73,255 |
| கிராமப்புற குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | 44,26,731 |
| நகர்ப்புற குழுக்கள் எண்ணிக்கை | 64,489 |
| நகர்ப்புற குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | 10,06,028 |
| மொத்த சேமிப்பு (ரூ. கோடியில்) | 1,382 |
| தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குழுக்கள் | 3,04,051 |
| கடனுதவி பெற்ற குழுக்கள் | 2,73,098 |
| வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) | 2,337.79 |

## 7.7 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

மகளிர் திட்டத்தின் கீழ், ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் அமைக்கப் படுகின்றன. ஒரு ஊராட்சியில் இயங்கிவரும் அனைத்து சுய உதவிக் குழுக்களிலிருந்தும் தலா 2 பிரதிநிதிகள், கூட்டமைப்பின் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பர். சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப் படுத்துவதற்கும் ஒரு களமாக இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயல்படும். ஒரு சுய உதவிக் குழு, தனியாக சாதிக்க முடியாததை ஒரு கூட்டமைப்பில் இணைந்து ஆற்றல்களையும், வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள முறையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள், தங்களது ஊராட்சியில் புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்து, பயிற்சிகள் வழங்கலாம். மேலும், அவற்றை பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம்தான், சுய உதவிக் குழுக்கள் வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய இயலும்.

அரசாணை எண்.116, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 31.07.2002 –ன்படி 2002 ஆம் ஆண்டிலேயே ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்க ஆணை வழங்கப்பட்டிருந்தும், இக்கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அவர்களது பொறுப்புகள் மற்றும் கடமைகளை பற்றி முறையான பயிற்சி அளிக்கப் படாமையால், கூட்டமைப்புகள் செயலற்ற நிலையில் இருந்து வந்தன. 2006–07 ஆம் ஆண்டில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- மொத்தமுள்ள 12618 ஊராட்சிகளில், இதுவரை 12405 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

- 11971 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு அவர்களுடைய பணிப் பொறுப்புகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 3202 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூ.10,000/– வீதம் அளிக்கப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழு கட்டிடங்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ஊராட்சி அளவிலுள்ள அனைத்து குழுக்களையும் கூட்டமைப்பில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவர், தரமதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.

- சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், அரசு சாரா நிறுவனங்களுக்கு இணையாக, மகளிர் திட்டத்தில் அங்கீகாரம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்கூட்டமைப்புகள் புதிய குழுக்களை அமைத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகளை செய்ய இயலும்.

- மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகளுக்கு **"மணிமேகலை விருதுகள்"** வழங்கப்படும்.

மேற்கூறிய நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு புத்துயிர் அளித்துள்ளன. 2007–08 ஆம் ஆண்டில், கூட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு, ஆளுமை மற்றும் நிதி நிர்வாகம் குறித்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

- சுய உதவிக் குழு வாழ்வாதார திட்டங்களின் மூலம் வழங்கப்படும் சமுதாய மற்றும் வணிக மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்புகளை நிர்வகிக்கும் பொறுப்பு இக்கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படவுள்ளது.

- குழு அமைத்தல், கண்காணித்தல் மற்றும் பயிற்சிகளுக்கு அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பட்டியல்களை, சான்று அளிக்கும் பொறுப்பு கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படவுள்ளது.

- அரசு சாரா நிறுவனங்களுடனான புதிய ஒப்பந்தத்தில் ஒரு பிரிவாக ஊராட்சி அளவில் அமைக்கப்படும் அனைத்து குழுக்களும், கூட்டமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று புதிய நிபந்தனை சேர்க்கப்படவுள்ளது.

## 7.8 மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி 7 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில், தொழில் முனைதலுக்கான அடிப்படை தகவல்கள் மற்றும் இலாபகரமான சிறுதொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளை கண்டறிய பயிற்சி அளிக்கப்படுகிறது. 2006–07 ஆம் ஆண்டில், 22,000 மகளிருக்கு, ரூபாய் 88 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுபோலவே, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் மேற்கொள்ள விரும்பும் தொழிலுக்குத் தேவையான அடிப்படைத் திறன், தொழில் பயிற்சி மூலம் அளிக்கப்படுகிறது. 2006–07 ஆம் ஆண்டில், 22,327 மகளிருக்கு, தொழில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் தொழில் பயிற்சிகள் ஒரு மாதத்திற்குக் குறைவான கால அளவில் அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அளிக்கப்படும் குறுகிய கால பயிற்சிகள் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், வெற்றிகரமாக தொழிலில் ஈடுபட தேவையான அளவு திறன்களை பெற இயலாத நிலை உள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும், தொழில் பயிற்சியும் தனித்தனியே தற்போது அளிக்கப்பட்டு வருவதைத் தவிர்த்து இவை இரண்டுமே ஒருங்கிணைந்து அளிக்கப்படுமாயின் மிகுந்த பயனுள்ளதாக இப்பயிற்சி விளங்கும்.

எனவே, 2007–08 ஆம் ஆண்டில், தொழில் பயிற்சியினை, ஒரு மாதத்திற்கு மேற்பட்ட நீண்ட கால பயிற்சியாக அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியினை 5 நாட்களாக சுருக்கி, தொழில் பயிற்சியின் ஒரு அங்கமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி, பிரசித்தி பெற்ற நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படவுள்ளது.

## 7.9 இளைஞர் சுய உதவிக் குழுக்கள்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மகத்தான வெற்றி, நன்கு வடிவமைக்கப்பட்ட அரசுத் திட்டங்கள் மூலம் சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் ஆற்றலை, ஆக்கபூர்வமாக, சமுதாய மேம்பாட்டிற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. இக்கண்ணோட்டத்துடன், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய வகையில், இளைஞர் சுய உதவிக் குழு திட்டத்தினை 2006–07 நிதியாண்டில் இந்த அரசு அறிவித்தது.

31.3.07 வரை, 9397 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1396 இளைஞர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.10,000/– வீதம் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இளைஞர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு, பிரசித்தி பெற்ற தொழில் நிறுவனங்களான, எல் & டி (L&T), எம்.ஆர்.எப். (MRF) மற்றும் டி.வி.எஸ். (TVS) ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் போன்ற நிறுவனங்கள் மூலம் 4098 இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 7.10 மகளிர் திட்டத்தின் தாக்கம்

மகளிர் திட்டம், சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்திட, பல்வேறு பயிற்சிகளை முறையாக திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக மகளிரின், குறிப்பாக ஊரக மகளிரின் சமூக நிலை உயர்ந்துள்ளதை கண்கூடாக அறிய முடிகிறது. சுய உதவிக் குழு இயக்கம் கீழ்க்கண்ட மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

- சுய உதவிக் குழு உறுப்பினரிடையே தன்னம்பிக்கையும், பேச்சுத் திறனும் மேம்பட்டுள்ளது.
- அரசின் நலத்திட்டங்களில் ஏழை மகளிருடைய பங்கேற்பும், அவற்றை பற்றிய விழிப்புணர்வும் உயர்ந்துள்ளது.
- பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் சுய உதவிக் குழு மகளிரின் பொருளாதார நிலை உயர்ந்துள்ளது.
- சாதி, சமய தடைகளைத் தகர்த்தெறிந்து மகளிர் ஒன்றுபட்டுள்ளனர்.
- கிராம சபா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரின் பங்கேற்பு.

- 2006 உள்ளாட்சி தேர்தலில், 6800 க்கும் மேற்பட்ட சுய உதவி குழு உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

- வங்கிகளின் பார்வையில் சுய உதவிக் குழுக்களின் நம்பகத்தன்மை உயர்ந்துள்ளதால், சுலபமாக வங்கிகளிலிருந்து கடன் பெறும் நிலை.
- கந்து வட்டி பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

- மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றியின் அடிப்படையில் இளைஞர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கம்.

## 7.11. பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதார திட்டம்

இத்திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்தும் பொறுப்பை தமிழ்நாடு சுய உதவிக் குழுக்களின் நலச்சங்கத்திற்கும் (TNWS), மாவட்ட அளவில், மாவட்ட வழங்கல் விற்பனை சங்கங்களுக்கும் (DSMSs) வழங்கி அரசாணை எண்.136, ஊரக வளர்ச்சித் துறை நாள் 19.10.2005–யில் உத்தரவிடப்பட்டது. இவ்வமைப்புகளுக்கு, இத்திட்டத்தை செயல்படுத்த போதுமான அளவு அனுபவம் மற்றும் பணியாளர்கள் இல்லாத காரணத்தால், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த அரசு முடிவு செய்தது.

இம்மாற்றத்திற்கு, ரோம் நகரில் அமைந்துள்ள பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் ஒப்புதல் கோரி, தமிழக அரசு, மத்திய அரசின் நிதி அமைச்சகத்துக்கு 10.8.2006–யில் கடிதம் எழுதியது. இக்கருத்துருக்கு பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியம் 28.02.2007–யில் ஒப்புதல் அளித்துள்ளது. 68.591 மில்லியன் அமெரிக்கன் டாலர்கள் (இன்றைய மதிப்பில் ரூ.308.66 கோடி) நிதி ஒதுக்கீட்டுடன் 8 வருடங்களில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம், தற்போது தொடங்கும் தருவாயில் உள்ளது. நடப்பாண்டில், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 கடலோர மாவட்டங்களில் இத்திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

## 7.12. தமிழ்நாடு மாநில தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி)

2001 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் வள ஆதார மையத்தினை, அரசு சார்ந்த, அரசு சாரா மற்றும் மக்கள் அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கியது. 2006–07 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கத்தின், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான எச்.ஐ.வி. / எய்ட்ஸ் விழிப்புணர்வு பயிற்சித் திட்டத்தினை கடலூர், தர்மபுரி, மதுரை, நாமக்கல், நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், தமிழகமெங்கும் அமைந்துள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வினை குறைந்த செலவினத்தில் நிறைவான முறையில் கிராமப்புற மக்களுக்கு அளிப்பதே ஆகும்.

ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு, தலைமை பயிற்றுநர் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக சுய உதவிக் குழு ஊக்குநர்களுக்கு

பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. அந்த ஊக்குநர்கள், அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்–களுக்கும் பயிற்சி அளித்து வருகின்றனர். இந்த 7 மாவட்டங்களிலுள்ள 52,228 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 8,35,648 உறுப்பினர்களுக்கு, எய்ட்ஸ் நோயைத் தடுத்தல் மற்றும் தற்காப்பு சம்பந்தமான விழிப்புணர்வு பயிற்சி பயனளிக்கும் வகையில் கொடுக்கப்பட்டு வருகிறது. 2007–08 ஆம் ஆண்டில், இத்திட்டம் மேலும் 11 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

### 7.13 சுய உதவிக் குழுக்களின் மூலம் விழிப்புணர்வு மற்றும் நலத்திட்டங்கள் செயலாக்கம்

2007–08 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்து, உதாரணமாக நல்வாழ்வு, சுகாதாரம், குழந்தை தொழில் ஒழிப்பு, வளர்கல்வி பற்றிய விழிப்புணர்வை சுய உதவிக் குழுக்களின் வாயிலாக ஏற்படுத்தி, அத்திட்ட பயன்கள் ஊரக மக்களை சென்றடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு நலத்திட்டங்களை ஒருங்கிணைக்கும் தளமாக சுய உதவிக் குழுக்கள் விளங்கும். அரசுத் திட்டங்களில், விழிப்புணர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் பயன்பாட்டினை மேம்படுத்துவதும், இத்திட்டங்களின் மூலம் பயன் பெறக்கூடியவர்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் மூலமாகவே திட்டப்பணிகளை மேற்கொள்வதும், இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

### 7.14. 2007–08 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் 2007–08 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ள பணிகள்:

- மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் ஆகிய திட்டங்களின் கீழ் 25,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தும் பொருட்டு அதன் நிர்வாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி நிர்வாகம் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், தமிழகத்திலும் மற்றும் இதர மாநிலங்களிலும் சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகளைப் பார்வையிட, பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ள உள்ளனர்.

- சுய உதவிக் குழு வாழ்வாதார திட்டங்களின் மூலம் வழங்கப்படும் சமுதாய மற்றும் வணிக மேம்பாட்டிற்கான உட்கட்டமைப்புகளை நிர்வகிக்கும் பொறுப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படும்.

- குழு அமைத்தல், கண்காணித்தல் மற்றும் பயிற்சிகளுக்கு அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பட்டியல்களை, சான்று அளிக்கும் பொறுப்பு கூட்டமைப்புகளுக்கு அளிக்கப்படும்.

- சுய உதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து, குழுக்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றிட 2500 சமுதாய பயிற்றுநர்கள் உருவாக்கப்பட உள்ளனர்.

- நடப்பாண்டில், புதிய சுய உதவிக் குழுக்களுக்கான கடன் இணைப்பு மற்றும் வாழ்வாதார செயல்பாடுகளை உயர்த்த கூடிய வகையிலும், செயல்பாட்டின் அடிப்படையிலும், அரசு சாரா நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்.

- பிரசித்தி பெற்ற நிறுவனங்களின் மூலம், மகளிருக்கு தரமான நீண்டகால தொழில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. இப்பயிற்சிகள் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்களை தொடங்குவதற்கு வழிவகுக்கும்.

- ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில், ஒரே பகுதியில் சுய உதவிக் குழுக்கள் பெருவாரியாக ஈடுபட்டிருக்கும் தொழில் கண்டறியப்படும். இக்குழுக்களுக்கு வடிவமைத்தல், பொருட்களை கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் தேவையான தொழில்நுட்ப உதவிகள் அளிக்கப்படும்.

- இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இளைஞர்களுடைய வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில், 5000 இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்படும்.

- பல்வேறு அரசுத் திட்டங்களை பற்றிய விழிப்புணர்வை, சுய உதவிக் குழுக்களின் வாயிலாக ஏற்படுத்தி, அத்திட்ட பயன்கள் ஊரக மக்களை சென்றடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. உலக வங்கி உதவி பெறும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

தமிழக அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிக்கவும் சமூக ஏற்றத் தாழ்வுகளை மாற்றவும் உறுதி பூண்டுள்ளது. மகளிர் திட்டம் மற்றும் பிற திட்டங்கள், ஏழைகளை ஒருங்கிணைத்து சுய உதவிக்குழுக்களாக அமைப்பதில் வெற்றி பெற்றிருப்பினும், பின்வரும் இலக்குகளை எய்துவதற்கு அதிக அளவில் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

- மிகவும் ஏழைகளை சுய உதவிக் குழுக்களில் இணைத்தல்

- தற்போதுள்ள சுய உதவிக் குழுக்களைப் பலப்படுத்தி, திறன் மற்றும் வளங்களை வலுப்படுத்துவதன் மூலம் அவற்றை தன்னிறைவு மற்றும் நிலைத்த தன்மையுடைய அமைப்புகளாக ஆக்குதல்.

- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும், வர்த்தக தொடர்புகளையும் ஏற்படுத்தி, வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வருமானத்தை உயர்த்துதல்.

- சுய உதவிக் குழுக்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் இடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

மேற்கண்ட நோக்கங்களை மனதில் கொண்டு, ‘‘தமிழ்நாடு வறுமை ஒழிப்புத் திட்ட வரைவு’’ ஒன்று தமிழக அரசால் 2000–2001 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ‘‘வாழ்ந்து காட்டுவோம்’’ திட்டம் வடிவமைக்கப்பட்டு, உலக வங்கியின் நிதி உதவிக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டம் உலக வங்கியால் ஜுலை 2005 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நவம்பர் 2005 இல் தொடங்கப்பட்டது. ஆறு ஆண்டு காலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 717 கோடிகளாகும்.

மக்களே செயல்படுத்தும் வண்ணம் அமைந்துள்ள இத்திட்டம், மகளிர் திட்டத்தின் கீழ் குழுக்கள் உருவாக்குதல் மற்றும் சமூக ஆற்றலளிப்பு போன்ற குறிக்கோள்களிலிருந்து சற்று மாறுபட்டு, ஏழை எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்திட்டத்தின் இலக்கு, ஏழை எளிய குடும்பங்கள், மிகவும் நலிவுற்றோர், ஒதுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் ஊனமுற்றோர் ஆவர். இத்திட்டத்தில் பயன்பெறுவோர், மக்கள் பங்கேற்புடன் கூடிய ஆய்வு மூலம் கண்டறியப்படுகின்றனர்.

## 8.1 திட்ட செயலாக்க பகுதிகள்

இத்திட்டம் மிகவும் பின் தங்கிய 70 வட்டாரங்களை உள்ளடக்கிய 15 மாவட்டங்களில் உள்ள 2432 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள மாவட்டங்களும், வட்டாரங்களும் கீழ்க்கண்ட அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

- வட்டாரங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களின் எண்ணிக்கைக்கு 50 விழுக்காடு மதிப்பு.
- அவ்வட்டாரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் எண்ணிக்கைக்கு 50 விழுக்காடு மதிப்பு.

## 8.2 திட்டக்கூறுகள்

இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் மற்றும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு பின் வருமாறு:

**அட்டவணை – 8**

**திட்டக்கூறுகள் வாரியாக நிதி ஒதுக்கிடு**

| வ.எண் | திட்டக்கூறு | நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடிகளில்) | % |
|---|---|---|---|
| அ.1 | மக்கள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்தல் | 69.90 | 9.75 |
| அ.2 | **கிராம நிதி** | | |
| | 1) கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி | 200.10 | 27.00 |
| | 2) வாழ்வாதார நிதி | 299.00 | 41.70 |
| | 3) கிராம ஊராட்சி ஊக்க நிதி | 48.00 | 6.70 |
| | 4) சார்பு தொழில் | 20.00 | 2.80 |

| | | | |
|---|---|---|---|
| | வல்லுநர்கள் மற்றும் கூட்டமைப்பு மேம்பாட்டு நிதி | | |
| ஆ | கிராம வாழ்வாதார மேம்பாட்டிற்கு மாநில மற்றும் மாவட்ட அலகுகளின் உதவி | 31.54 | 4.40 |
| இ | திட்ட மேலாண்மை | 48.56 | 6.75 |
| | **மொத்தம்** | **717.10** | **100.00** |

### அ 1. மக்கள் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்

ஆரம்ப கட்ட நடவடிக்கைகளான செய்தித் தொடர்பு முகாம்கள், மக்களின் பங்கேற்பு மூலம் ஏழை மக்களைக் கண்டறிதல், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தினை உருவாக்குதல் மற்றும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் ஆகியவை இந்நிதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

### அ 2. கிராம நிதி

### 1) கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி

இந்த நிதி, நேரடியாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு, அச்சங்கத்தின் மூலமே நிர்வகிக்கப்படுகிறது. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறன்களை வளர்த்தல், சுய உதவிக் குழுக்களுக்கு ஆரம்ப நிதி வழங்குதல், இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல் மற்றும் ஊனமுற்றோர், நலிவுற்றோர் ஆகியோரின் மறுவாழ்வுக்கு உதவிகள் அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்நிதியில் மேற்கொள்ளப்படுகிறது.

### 2) வாழ்வாதார நிதி

சுய உதவிக் குழு / தொழில் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மானியம் வழங்குதல் மூலம் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தான் இந்நிதியின் முக்கிய குறிக்கோள்.

### 3) கிராம ஊராட்சி ஊக்க நிதி

இத்திட்டம் சிறப்பாக செயல்பட உறுதுணையாக இருந்து, ஏழை மக்களின் நலனுக்காக பணியாற்றும் கிராம ஊராட்சிகளுக்கு கிராம ஊராட்சி ஊக்க நிதி வழங்கப்படுகிறது. ஊக்க நிதி பெற தகுதி பெறும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ. 6 இலட்சம் வழங்கப்படும்.

### 4) சார்பு தொழில் வல்லுநர்கள் மற்றும் கூட்டமைப்பு மேம்பாட்டு நிதி:

கிராம அளவில் வல்லுநர்களை உருவாக்கவும், சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் மற்றும் தொழில் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்கு உதவி புரிவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

**ஆ. கிராம வாழ்வாதார மேம்பாட்டிற்கு மாவட்ட மற்றும் மாநில அலகுகளின் உதவி**

இந்நிதியில் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகள்

- மாநில மற்றும் மாவட்ட பணியாளர்களின் திறன் வளர்த்தல்.
- இலக்கு மக்களுக்கு நிதி மற்றும் வணிகத் தொடர்புகள் ஏற்படுத்தும் பொருட்டு, வங்கிகள், கல்வி நிறுவனங்கள், வணிக அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயலாற்றுதல்.
- தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைகளை உருவாக்குதல்.

**இ. திட்ட மேலாண்மை**

மாநில மற்றும் மாவட்ட அளவில், இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கு இந்நிதி பயன்படுத்தப் படுகிறது.

## 8.3 திட்டச் செயலாக்க அமைப்புகள்

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட செயலாக்க அமைப்புகள் பின் வருமாறு:

- மாநில அளவிலான சங்கம்.
- மாவட்ட அளவிலான சங்கங்கள்.
- 10–15 ஊராட்சிகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் திட்ட ஒருங்கிணைப்பு அணிகள்.
- ஊராட்சி அளவில், பெருவாரியான இலக்கு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் இத்திட்டத்தினை செயல்படுத்தும். கிராம சபையால் நியமிக்கப்பட்ட ஒரு சமூக தணிக்கைக் குழு, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கோட்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும்.

### 8.3.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

இத்திட்டத்தின் இலக்காக உள்ள மக்களிடமிருந்து பெருவாரியான பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, கிராம வறுமை ஒழிப்புச் சங்கமாகும். இதன் அலுவல் சாரா தலைவராக கிராம ஊராட்சித் தலைவர் இருப்பார். இச்சங்கத்தில், ஊராட்சியிலுள்ள ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் பயன் பெறக்கூடிய மக்களிலிருந்து ஒரு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் பிரதிநிதியாக இருப்பார். மேலும் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பின் செயலர், ஒரு ஊனமுற்றோர் பிரதிநிதி, கிராம அளவில் செயல்படும் குழுக்களிலிருந்து (குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு, கல்விக் குழு போன்ற குழுக்கள்) இரண்டு பிரதிநிதிகள் ஆகியோர் கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களாக கிராம சபை மூலம் நியமிக்கப்படுவர். கிராம வறுமை

ஒழிப்புச் சங்கம் 10–20 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இச்சங்கம், கிராம சபைக்கு பொறுப்பானதாக இருக்கும்.

### 8.3.2. சமூக தணிக்கைக் குழு

சமூக தணிக்கைக் குழு, கிராம சபை மூலம் நியமனம் செய்யப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்டு, திட்ட செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து, இத்திட்டத்தின் பயன்கள் திட்டக் கோட்பாடுகளின் வரையறைகளுக்கு இணங்க, இலக்கு மக்களை சென்றடைவதை உறுதி செய்யும். சமூக தணிக்கைக் குழு, மக்களின் வளர்ச்சிக்கு அவர்களையே பொறுப்பாக்கும் ஒரு அமைப்பாகும். இது கிராம சபைக்கு கீழ் இயங்கும்.

## 8.4 திட்ட செயல்பாட்டின் பல்வேறு நிலைகள்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம், அனைத்து நடவடிக்கைகளிலும் மக்கள் பங்கேற்பிற்கு முக்கியத்துவம் அளித்து கீழ்க்கண்ட நிலைகளாக செயல்படுத்தப்படுகிறது.

**அ. தொடக்க நிலை**

- திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த, செய்தித் தொடர்பு முகாம்கள்.
- திட்டத்தில் சேருவதற்கான கிராம சபையின் ஒப்புதல்.
- கிராம ஊராட்சிகளுக்கு தொடக்க நிதி வழங்குதல்.
- மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல்.

**ஆ. திறன் வளர்ப்பு நிலை**

- விடுபட்ட ஏழை மக்கள், ஊனமுற்றோர் ஆகியோரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி பயிற்சி அளித்தல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு, தவணை முறையில் கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி வழங்குதல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சமூக தணிக்கைக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளின் அலுவலர்களின் திறனை மேம்படுத்தல்.
- தொழில் பயிற்சி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்குதல்

**இ. வாழ்வாதார நிலை**

- தொழில் குழுக்களை உருவாக்குதல் மற்றும் தொழில் திட்டங்கள் தயாரித்தல்.
- தொழில் திட்டங்களை மதிப்பாய்வு செய்து வங்கிகளிலிருந்து கடன் வசதி பெற்றுத் தருதல்.
- சுய உதவிக் குழு / தொழில் குழுக்களுக்கு வாழ்வாதார நிதி வழங்குதல்.
- தொழில் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

**ஈ. வலுப்பெறும் நிலை**

- தொழில் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்.
- வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்துதல்.

## 8.5 ஜப்பான் சமூக மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டங்கள்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2005 ஆம் ஆண்டு முதல் 10 கிராம ஊராட்சிகளில் முன்னோடியாக செயல்படுத்தப் படுகிறது. கீழ்க்கண்ட இரண்டு மாதிரிகள், பரிசோதனை செய்யப்படுகின்றன.

அ. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

ஆ. கிராம ஊராட்சி

### அ. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மாதிரி

''வாழ்ந்து காட்டுவோம்'' திட்டத்தின் மாதிரி, கீழ்க்கண்ட ஆறு ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**அட்டவணை – 9**

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் – மாதிரி கிராம ஊராட்சிகள்**

| வ. எண் | கிராம ஊராட்சி | மாவட்டம் |
|---|---|---|
| 1 | கடுவஞ்சேரி | காஞ்சிபுரம் |
| 2 | இடையஞ்சாத்து | வேலூர் |
| 3 | ஓடந்துறை | கோயம்புத்தூர் |
| 4 | ம.கொளக்குடி | கடலூர் |
| 5 | ஜி.உசிலம்பட்டி | தேனி |
| 6 | கடம்பூர் | விழுப்புரம் |

## ஆ. கிராம ஊராட்சி மாதிரி

இம்மாதிரியில், திட்ட செயல்பாட்டிற்கு கிராம ஊராட்சியே பொறுப்பேற்கிறது. இதற்கான நிதி ஆதாரங்கள் நேரடியாக கிராம ஊராட்சிக்கே வழங்கப்படுகின்றன. ஏழைகள், ஊனமுற்றோர், நலிவுற்றோர் ஆகியோரின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கிராம வளர்ச்சி குழு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக செயல்படுகிறது. கிராம வறுமை ஒழிப்புச் சங்க மாதிரியில், திட்ட நிதி, மக்கள் அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆனால், கிராம ஊராட்சி மாதிரியில் திட்ட நிதியினை, அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் செலவிடலாம்.

**அட்டவணை – 10**

**கிராம ஊராட்சி மாதிரி செயல்படுத்தப்படும் ஊராட்சிகள்:**

| வ. எண் | கிராம ஊராட்சி | மாவட்டம் |
|---|---|---|
| 1 | துத்திப்பட்டு | வேலூர் |
| 2 | கீரப்பாளையம் | கடலூர் |
| 3 | ஆராய்ச்சி | திருச்சி |
| 4 | மேலாத்தூர் | புதுக்கோட்டை |

### 8.5.1 முன்னோடி கிராமத்தின் சாதனைகள்

- **3390** விடுபட்ட ஏழை மக்கள் மற்றும் **936** ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர் ஆகியோரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- **172** புதிய சுய உதவிக் குழுக்கள், தர மதிப்பீடு செய்யப்பட்டு வங்கிகள் மூலம் நிதியுதவி பெற்றுள்ளன.
- **195** ஊனமுற்றோர் மற்றும் **214** நலிவுற்றோர்களுக்கு (விதவைகள், ஆதரவற்றோர்) தனிநபர் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.
- கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல், கட்டிடக் கலை, பட்டறைத் தொழில் போன்ற துறைகளில் **19** சார்புத்தொழில் வல்லுநர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டுள்ளது.
- ஆறு தொழில் குழுக்களுக்கு, தொழில் திட்டங்களுக்காக ரூ.**20,00,000/–** வழங்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள், சணல் உற்பத்தி, பாய் பின்னுதல், பால் பொருள் உற்பத்தி, விழாக்களுக்கு பொருட்களை வாடகைக்கு விடுதல், சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளன.

### 8.5.2 முன்னோடி ஊராட்சிகளிலிருந்து பெறப்பட்ட படிப்பினைகள்

முன்னோடித் திட்டத்தின் செயலாக்கம் கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட முக்கியமான படிப்பினைகளைத் தந்துள்ளது.

- மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிவதன் மூலம் இலக்கு மக்களை சரியாக இனங்காணவும், அதற்கு மக்களே பொறுப்பேற்கும் நிலையும் உருவாகிறது.
- கிராம சபைகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் மக்களே முடிவெடுப்பதால், திட்ட செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புணர்வும் உறுதி செய்யப்படுகிறது.
- மக்கள் அமைப்புகளான, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தகுந்த திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதன் மூலம் கிராமத்தின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தவும், முன்னேற்றத்திற்கு திட்டமிடவும், நிதி ஆதாரங்களை முறையாக பயன்படுத்தவும் இயலுகிறது.
- அறிவிப்புப் பலகைகள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்கள் போன்ற சமூக பொறுப்பு முறைகள் இத்திட்டத்தின் பயன்கள், இலக்கு மக்களைச் சென்றடைவதைக் கண்காணித்து உறுதி செய்கின்றன.
- ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர் ஆகியோரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு, தனி நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய சிறப்புக் கவனம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.
- இலக்கு மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு, திட்டப்பணியாளர்களின் தொடர் வழிகாட்டுதலும், உறுதுணையும் இன்றியமையாதவை.

### 8.6 "வாழ்ந்து காட்டுவோம்" திட்டத்திற்கும் மகளிர் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

- மகளிர் திட்டம் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்ற மக்கள் அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது.
- வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஏழை மகளிர் மட்டுமின்றி, உடல் ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர் மீது சிறப்பு கவனம் செலுத்துகிறது. இதற்காக, சிறப்பு நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது.
- வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஏழை, எளிய மக்களை தொழில் குழுக்களாக அமைத்து, வாழ்வாதார மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

- மகளிர் திட்டத்தில் கிராம ஊராட்சிகளுக்கு நேரடி தொடர்பு இல்லை. இதற்கு மாறாக, வாழ்ந்து காட்டுவோம் திட்ட செயல்பாட்டில் கிராம ஊராட்சிகளுக்கு முக்கிய பங்கு உள்ளது.

## 8.7 திட்டத்தின் தற்போதைய நிலை

இத்திட்டம் 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் முதற்கட்டமாக பின்வரும் 15 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை – 11**

**முதற்கட்ட திட்ட வட்டாரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | வட்டாரம் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | குடிமங்கலம் | 23 |
| 2 | கடலூர் | நல்லூர் | 64 |
| 3 | காஞ்சிபுரம் | குன்றத்தூர் | 44 |
| 4 | நாகப்பட்டினம் | கீழ்வேளூர் | 38 |
| 5 | நாமக்கல் | எருமைப்பட்டி | 24 |
| 6 | இராமநாதபுரம் | போகளூர் | 26 |
| 7 | சேலம் | அயோத்தியாபட்டினம் | 32 |
| 8 | தேனி | போடிநாயக்கனூர் | 15 |
| 9 | திருவள்ளூர் | எல்லாபுரம் | 53 |
| 10 | திருவாரூர் | கொரடாச்சேரி | 44 |
| 11 | திருநெல்வேலி | மானூர் | 41 |
| 12 | திருவண்ணாமலை | செங்கம் | 44 |
| 13 | தூத்துக்குடி | புதூர் | 44 |
| 14 | வேலூர் | குடியாத்தம் | 44 |
| 15 | விழுப்புரம் | கண்டமங்கலம் | 45 |
| | | **மொத்தம்** | **581** |

இரண்டாம் கட்டமாக, 14 வட்டாரங்களில் உள்ள 518 கிராம ஊராட்சிகளில் இத்திட்ட செயல்பாடு தொடங்கப் பட்டுள்ளது. திட்ட செயலாக்கப் பகுதிகளில் பின் வரும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

- திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், மாவட்ட அளவிலும் பகுதி அளவிலும் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- அனைத்து பணியாளர்களுக்கும் திட்ட அறிமுகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- முதல் கட்டமாக, திட்டம் செயல்படுத்தப்படும் 581 கிராம ஊராட்சிகளுக்கும் தொடக்க நிதியாக தலா ரூ.35,000/– வழங்கப்பட்டுள்ளது.
- திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 581 ஊராட்சிகளிலும் செய்தித் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

- **31.3.2007** வரை **495** கிராம ஊராட்சிகளில் இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு, அந்தப் பட்டியலுக்கு கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. **411** கிராம ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- **31.3.2007** வரை, இரண்டாம் கட்ட திட்ட செயலாக்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **14** வட்டாரங்களில், **443** ஊராட்சிகளில் மக்களுக்கு திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் செய்தித் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

2007–08 ஆம் ஆண்டில் மூன்று மற்றும் நான்காம் கட்ட, திட்ட செயல்பாடுகள் முறையே ஆகஸ்ட் 2007 மற்றும் டிசம்பர் 2007 ஆகிய மாதங்களில் தொடங்கப்பட்டு, 70 வட்டாரங்களில் உள்ள 2432 ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் செயலாக்கப்படும்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்காக, 2007–08 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் ரூ.132 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.8 மகளிர் திட்டமும் வாழ்ந்து காட்டுவோம் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுதல்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படுத்தப்படும் 70 வட்டாரங்களில் மகளிர் திட்டத்தினை, வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பணியாளர்கள் மூலமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்ற மக்கள் அமைப்புகள் மூலமாகவும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இரு வேறு நிறுவனங்கள், ஒத்த பணியினை மேற்கொள்வதைத் தவிர்க்கவும், நல்ல ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்து அவற்றிற்கான பயிற்சி மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களும் மேற்கொள்ள மகளிர் திட்டத்தின் கீழ் அங்கீகாரம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 9. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

கடந்த 26.12.2004–ல் தமிழக கடற்கரைப் பகுதிகளை சுனாமி தாக்கியதால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மனித உயிர்கள், வாழ்வாதாரம் மற்றும் உடமைகளுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து வள ஆதாரங்களையும் தமிழ்நாடு அரசு ஒருமுகப்படுத்தியது. பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை முந்தைய நிலைக்கு கொண்டுவரவும், பாதுகாப்பான குடியிருப்புகளை மீண்டும் உருவாக்கிக் கொடுக்கவும், சேதமடைந்த பொதுச்சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்புகளை புனரமைத்திடவும், மாநில அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு, மத்திய அரசு, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் கீழ்க்கண்ட திட்டங்கள் இணைந்து வலு சேர்த்து வருகின்றன:

i) ரூ.300.62 கோடி நிதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் மற்றும் மானியத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம் (Tsunami Emergency Assistance Project)

ii) ரூ.1350 கோடி நிதியில் உலக வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project)

iii) ரூ.497.95 கோடி மத்திய அரசின் மான்யத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம்.

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் (PTSLP) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றப்படுகிறது.

சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உட்பட தமிழக அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்தி வருகின்றன. இதனை வருவாய்த் துறையில் உள்ள திட்ட மேலாண்மை அலகு ஒருங்கிணைப்பு செய்து வருகின்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அதிகமான ஒதுக்கீடு (ரூ.2148.57 கோடி) செய்யப்பட்டதனால், இத்திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிட, ஒரு திட்டச் செயலாக்க அலகு தனியே ஏற்படுத்தப்பட்டு, 01.8.2005 முதல் செயல்பட்டு வருகின்றது.

சுனாமி அவசர கால உதவித்திட்டம் மற்றும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 13.5.2006 வரை ரூ.4.95 கோடி மட்டும் செலவிடப்பட்டிருந்தது. திட்ட செயலாக்கத்தினை விரைவுபடுத்திடவும், வாழ்வாதார மேம்பாடு மற்றும் உள் கட்டமைப்புகளை புனரமைப்பதற்கும் மிகவும் தேவையான உந்துகை தரும் விதம் 2006–07 ஆம் ஆண்டில் இந்த அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த உந்துகை நல்ல பலனைத் தந்ததினால் 31.3.2007–ல் இத்திட்டங்களின் கீழ் செலவு ரூ.155.41 கோடி ஆகியது. சுனாமி புனரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் அனைத்து துறைகளின் மொத்த செலவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பங்கு மட்டும் 73 சதவீதம் என்பது கவனத்திற்குரியது.

சுனாமி திட்டங்களின் செயலாக்கத்தினை விரைவுபடுத்தும் பொருட்டு, சுனாமி திட்ட செயலாக்க அலகு மற்றும் மாவட்ட செயலாக்க அலகுகளுக்கென 237 பணியிடங்கள் இத்துறையில் தோற்றுவிக்கப்பட்டன. எனினும், 13.5.2006 வரை 61 பணியிடங்கள் மட்டும் நிரப்பப்பட்டிருந்த நிலையில், தற்போது 216 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

## 9.1 ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம் (TEAP)

இத்திட்டம் ரூ.300.62 கோடி நிதி ஒதுக்கீட்டில் 06.4.2005 முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்கள் பயன்பெறும். வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவற்றிற்கான நிதியை ஆசிய வளர்ச்சி வங்கி 100 சதவீதம் மான்யமாக அனுமதித்துள்ளது.

13.5.2006 வரை இத்திட்டத்தின் கீழ் செலவு ரூ.4.95 கோடி மட்டும் ஆகும். கடந்த 10 மாதங்களில் இந்த அரசு இத்திட்டத்தில் ரூ.142.35 கோடி செலவினம் மேற்கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு பணிகளின் செயலாக்கத்தினை குறிப்பிடத்தக்க அளவில்

விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் உட்கூறுகளில், **31.3.2007** வரையிலான நிதி நிலை முன்னேற்றம் அட்டவணை **12–ல்** காணலாம்.

### அட்டவணை–12
### சுனாமி அவசர கால உதவித் திட்டக் கூறுகள்

(ரூபாய் கோடியில்)

| வ எ ண் | திட்ட உட்கூறுகள் | நிதி ஒதுக்கீடு | 6.4.05 முதல் 13.5.06 வரை செலவு | 14.5.06 முதல் 31.3.07 வரை செலவு |
|---|---|---|---|---|
| 1. | வாழ்வாதாரம் | 190.10 | 2.88 | 112.07 |
| 2. | சுகாதாரம் | 5.86 | 0.92 | 0.01 |
| 3. | ஊரக உள்கட்டமைப்பு | | | |
| | அ. சாலைகள் மற்றும் வடிகால்கள் | 77.06 | 1.15 | 26.26 |
| | ஆ. பொதுக் கட்டிடங்கள் | 22.19 | 0 | 0.02 |
| 4. | நிர்வாகச் செலவினங்கள் | 5.41 | 0 | 3.99 |
| | மொத்தம் | 300.62 | 4.95 | 142.35 |

## 9.1.1 வாழ்வாதார உட்கூறு

வாழ்வாதார திட்ட உட்கூறுக்கென உள்ள ரூ.190.10 கோடி, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம், சிறு கடன் அளித்தல், சிறு தொழில்கள் தொடங்கல், திறன் வளர்த்தல் மற்றும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு சிறப்பு உதவி வழங்குதல் ஆகியவற்றிற்கு வழி வகை செய்கிறது. வாழ்வாதாரத்திற்கான ரூ.190.10 கோடி நிதி ஒதுக்கீட்டில், 80 சதவீதம் சுழல் நிதி, பொருளாதார உதவி, உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு சிறப்பு உதவி மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கான நிதி உதவி ஆகியவற்றை அளிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மீதம் உள்ள 20 சதவீதம் வாழ்வாதாரத்திற்குத் தொடர்புடைய சமுதாய உள் கட்டமைப்பு மற்றும் திறனாக்க மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### சுழல் நிதி

25,955 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.67.26 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த எளிய, நம்பகமான மற்றும் உடனே கிடைக்கக்கூடிய சிறுகடன் உதவியை அன்றாட பயன்பாட்டிற்கும், தேவையான தொழில் முதலீட்டிற்கும் ஏழைப் பெண்கள் பயன்படுத்துவதால், அவர்களின் வாழ்க்கை நிலை மாறியுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள, வருவாய் தரக்கூடிய சொத்துக்களை உருவாக்கவும் அல்லது ஏற்கனவே உள்ள வருவாய் ஈட்டக்கூடிய சொத்துக்களை மேம்படுத்திக் கொள்ளவும் இந்நிதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

### பொருளாதார உதவி

சிறு தொழில்களை திறம்பட நடத்திட விரும்பும் நிலைத்து செயல்படும், சுய உதவி குழுக்களுக்கு பொருளாதார உதவி வழங்கப்படுகிறது. கால்நடைகளை வளர்த்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், மீன் ஊறுகாய் தயாரித்தல், செங்கல் உற்பத்தி செய்தல் போன்ற பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் 1,341 சுய உதவி குழுக்களுக்கு ரூ.15.71

கோடி பொருளாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1,200 சுய உதவிக்குழுக்களுக்கு நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ் பொருளாதார உதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு உதவிகள்**

உடல் ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் இந்த சமுதாயத்தில், அதுவும் பேரிடரால் பாதிக்கப்படும் பகுதிகளில், மிகவும் பாதிப்புக்குள்ளாகும் பிரிவினராவர். இவர்களின் சமுதாய உடமைகள் மிகவும் குறைவாக உள்ளதால், பொது மக்களுக்கென உள்ள திட்டங்களின் பயன்களை இவர்கள் பெறுவது கடினமாக உள்ளது. மேலும் இப்பிரிவினர் வங்கி கடன் பெறுவதும் கடினமாக உள்ளது. கடந்த பத்து மாதங்களில், இந்த அரசு உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார மேம்பாட்டிற்கென பெருந்திட்டம் ஒன்றைத் தொடங்கியது. 26,954 ஊனமுற்ற நபர்களுக்கு மான்யமாக தலா ரூ.10,000/– வீதம் ரூ.26.95 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வுதவி கடலோர ஊராட்சி ஒன்றிய/கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமென வரையறுக்கப்படாமல், கடலோர மாவட்டம் முழுவதும் உள்ள தகுதி வாய்ந்த உடல் ஊனமுற்றோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுதவியைப் பெற்ற பின்னர் இவர்களது வாழ்க்கைத்தரம் கணிசமாக உயர்ந்துள்ளது. இது உடல் ஊனமுற்றோர் நலனுக்காக இந்த அரசால் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளில் மிகப்பெரிய ஒன்றாகும்.

**சமுதாய உள் கட்டமைப்புகள்**

தற்போதுள்ள முக்கிய உத்தேசத் திட்டங்கள்:

- மகளிர் சுய உதவி குழுக்களின் பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி மையம் ரூ.5 கோடி உத்தேச மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டுதல். நாளிதழ்களில் கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில், ஏழு கட்டிட வடிவமைப்பு வல்லுநர்களிடமிருந்து வடிவமைப்பு செய்ய விருப்பம் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

- கடலோரப் பகுதியில் உள்ள விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு வருமானம் ஈட்டக் கூடிய விலை கிடைக்கும் வகையில் 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கட்டுதல்.

- இந்திய அரசின் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் குழுமம், மாநில கைத்தறித் துறை மற்றும் ஆடை ஏற்றுமதி தொழில் அமைப்புடன் கலந்து ஆலோசித்து, ஏற்றுமதி உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் , ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவிலில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் தொகுதியின் தரத்தை உயர்த்துதல்.

- கடலோர பகுதிகளில் ஏற்கனவே உள்ள சங்கங்களின் பால் சேகரிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக, தினசரி 2,500 லிட்டருக்கு மேல் பால் கொள்முதல் செய்யும் 19 சங்கங்களுக்கு ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் பால் குளிரூட்டும் பெரிய கலன்கள் வாங்கித் தரப்படும். மேலும், சுய உதவிக் குழுக்கள், ஆவின் பால் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக, 45 பாலகங்கள் (Milk Parlours) ரூ.2.01 கோடி மதிப்பீட்டில் அமைத்துத் தரப்படும்.

- பாரம்பரியமிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, ரூ.10 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் மற்றும் மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்கா அமைத்தல்.

**திறனாக்க மேம்பாடு**

சுய உதவிக் குழுக்கள் செயல்திறன் மிக்க குழுக்களாக இயங்கும் வண்ணம், குழுக்களின் உறுப்பினர்களுக்கு, அடிப்படை பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சிகளுக்காக ரூ.1.47 கோடி செலவிடப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் தகுதிவாய்ந்த தின ஊதியம் பெறும் பணியாளர்களின் தேவை வளர்ந்து வருகிறது. இந்தப் பிரிவு மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, தனிநபர்களுக்கு தொழில் முறைப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக பணியமர்த்தலில் பெயர் பெற்ற நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பயிற்சி முடிந்தபிறகு பயனாளிகளை பணியில் அமர்த்துவது பயிற்சி நிறுவனத்தின் பொறுப்பாகும். இந்த ஆண்டில், இந்த செயல் முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

### 9.1. 2 சுகாதாரம்

இத்திட்ட உட்கூறின் கீழ் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களிடையே பாதுகாப்பான சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதற்காக, விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ரூ.5.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.1.3 சாலைப் பணிகள்

திட்ட உட்கூறான ஊரக உள்கட்டமைப்பின் கீழ், சுனாமி பாதித்த பகுதிகளில் சாலை மற்றும் வடிகால் பணிகளுக்காக ரூ.77.06 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 564 கிலோ மீட்டர் நீளமுள்ள 501 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. 220 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளும் விரைவில் முடிக்கப்படும். இதுவரை இப்பணிகளுக்காக ரூ.27.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 9.1.4 பொதுக் கட்டிடங்கள்

பொதுக் கட்டிடங்கள் என்ற உட்கூறின் கீழ், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பழைய கட்டிடங்களைப் புனரமைத்தல் மற்றும் தரம் உயர்த்தும் பணிகள் ரூ.22.19 கோடி மதிப்பீட்டில் எடுத்து செய்யப்படும். இப்பணிகள் 2007–08–ம் நிதியாண்டில் முடிக்கப்படும்.

## 9. 2 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (ETRP)

இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கால அளவு 09.8.2005 முதல் மூன்று ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தின் தொடக்கத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய கூறுகள் :

- பழுதடைந்த வீடுகளை திரும்பக் கட்டுதல்
- அடிப்படை வசதிகளை அமைத்தல்

உலக வங்கி திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்ட ரூ.1080 கோடியும், குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட ரூ.270 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டித் தரும் பணியை அரசு சாரா நிறுவனங்கள் மேற்கொண்டதால் (வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் மற்றும் நிவாரண ஆணையரின் கண்காணிப்பில்) அவசர கால சுனாமி மறு கட்டமைப்பு திட்ட நிதியினை பழுதடைந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்காகப் பயன்படுத்த இயலவில்லை. எனவே, அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின் கீழ் அரசு சாரா நிறுவனங்களால் மீண்டும் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. உலக வங்கியின் நிதி உதவி மிகப் பெரிய திட்டங்களுக்கு உகந்ததாகும். சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள், தெருவோர வடிகால் வசதி, மின் வசதி போன்ற சிறிய அளவிலான பணிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு உலக வங்கியின் கொள்முதல் நடைமுறைகள் மிகவும் சிக்கலானதாக இருப்பதால், தாமதங்களுக்கு வழி வகுத்தது. இந்த இடையூறைத் தவிர்க்க அவசர கால மறு கட்டமைப்பு திட்ட நிதிக்குப் பதிலாக ராஜீவ்காந்தி மறுவாழ்வு திட்ட நிதியினைப் பயன்படுத்தி அடிப்படை வசதிகள் செய்து தர அரசாணை நிலை எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி 2) துறை, நாள் 12.3.2007–ல் ஆணையிட்டுள்ளது. அடிப்படை வசதிகளுக்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன.

இந்த மாற்றங்களின் விளைவாக, அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின் இலக்கு மறு ஆய்வு செய்யப்பட்டு, இத்திட்ட நிதியினைக் கொண்டு கடல் ஏற்றத்திலிருந்து 200 மீட்டரிலிருந்து 1000 மீட்டருக்குள் உள்ள இயற்கை இடர்பாடுகளுக்கு உள்ளாகும் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வீடுகளை மீண்டும் கட்டித் தர அரசு முடிவு செய்தது. இத்திட்ட செயற்குறிப்பு அரசின் வருவாய்த் துறை மூலமாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு, இது குறித்து உலக வங்கி அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட செயற்குறிப்பிற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வீடுகளை மீண்டும் கட்டும் பணியினைத் தொடங்கும்.

## 9.3 ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டம்

கடல் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் 1000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் போன்ற வேறு பல அரசு நிதி உதவியுடனான திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு, 01.01.2006–ம் தேதியில் 10 ஆண்டுகள் பழமையான வீடுகள் ஆகியவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ராஜீவ்காந்தி மறுவாழ்வு திட்ட நிதியினைப் பயன்படுத்தி மீண்டும் கட்டித் தர அரசாணை நிலை எண்.60 வருவாய் (இ.இ.4–2) துறை நாள் 29.1.2007–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வீடுகளைக் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.

சுனாமி ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த பிறகும், சில அரசு சாரா நிறுவனங்கள் வீடு கட்டும் பணியைத் தொடங்க வேண்டிய நிலையிலேயே உள்ளன. அரசு ஆணை நிலை எண்.625 வருவாய் (இ.இ.4–2) துறை நாள் 20.9.2006–ல் அரசு சாரா நிறுவனங்களால் கட்டப்படாமல் விடுபட்ட 2,920 வீடுகளை, ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் ரூ.2.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டவும், அவற்றிற்கு வீட்டிற்கு ரூ.40,000/– வீதம் அடிப்படை வசதிகளை செய்து தரவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடத்தப்பட்ட விரிவான கணக்கெடுப்பிற்குப் பின்னர், வீடுகள் இருந்த அதே இடத்தில் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில், மீண்டும் கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 1,860 என கண்டறியப்பட்டது. இவ்வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, வீடுகள் கட்டும் பணிகளுக்கான வேலை உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 10. வரவு–செலவு திட்டம் 2007–08

2007–08ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.3,470.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.2,664.26 கோடி மற்றும் மூலதன செலவினம் ரூ.806.10 கோடி ஆகும்.

## 11. முடிவுரை

இந்த அரசு கடந்த 10 மாத கால அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாட்டில் முழு அளவிலான மேம்பாட்டை ஏற்படுத்தி உள்ளது. ஊராட்சி உதவியாளர் நிலையில் இருந்து உதவி இயக்குநர் நிலை பணியிடங்களின் வரை இருந்த காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிட ஆணையிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியான நடவடிக்கைகள் மற்றும் கண் காணிப்பின்மூலம், பெரும் எண்ணிக்கையில் இருந்த நிலுவைப் பணிகள் முடிக்கப்பட்டன. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்ற பெரிய திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கமானது இத்திட்டங்களின் செயலாக்கத்தில் மிகுந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. ஊரகப் பகுதிகளில் நகரத்தில் உள்ள வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் துவக்கப்பட்டுள்ள திருப்புமுனை திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மத்திய, மாநில அரசுகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தும் மற்ற திட்டங்கள் அனைத்தையும் விட நிதி ஒதுக்கீட்டில் பெரிய திட்டமாகும். சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், இளைஞர் சுய உதவிக் குழுக்களை அமைத்து தொழில் பயிற்சிகள் அளித்தல், கடலோர மாவட்டங்களிலுள்ள உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவிகள் வழங்குதல் போன்ற முன்னோடி நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. அக்டோபர் 2006ல் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூன்றாவது சாதாரண தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் ஆகிய கிராம ஊராட்சிகளில் நெடுங்காலமாக இடஒதுக்கீட்டின் காரணமாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பிரச்னை தீர்க்கப்பட்டது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பரவலாக்கம், பொறுப்புகள் மற்றும் கடமைகளை மேலும் வழங்குவது குறித்து பரிந்துரை செய்திட ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்மீது உரிய

நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு குறித்து, பெரும் கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது அடித்தள அளவில் மேம்பட்ட சேவைகளை உள்ளாட்சிகள் அளித்திட உதவும். தமிழக மக்கள் எங்களுக்கு அளித்துள்ள பெரும் பொறுப்பை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஊக்கமூட்டும் தலைமையின்கீழ், சிறந்த முறையில் நிறைவேற்றுவோம் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்.

**மு.க. ஸ்டாலின்**

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்